செந்தமிழ்

தொகுதி 86 செப்டம்பர்—92 பகுதி 3

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர், பேராசிரியர், பேரறிஞர்

நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,பி.எட்.

பொருளடக்கம்

1. பாட்டும் தொகையும் — ஒரு பார்வை 1

பேரறிஞர். அ.மா. பரிமணம்
தமிழ்ப்பேராசிரியர், தஞ்சாவூர்

2. ஆங்கிலத்தில் அகநானூறு 17

பேரா. பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை

3. தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும் 18

மு. இராகவய்யங்கார்,

4. சீக்கிய குருதுவாராவும் வழிபாட்டு முறைகளும் 30

ஆய்வாளர் அ. நடராசன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

5. இலக்கணக் கொத்து 38

பேரறிஞர் பெ. சுயம்பு
தமிழ்த்துறை, ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

கருத்துரை வரவேற்கப்படுகிறது

இன்று பெருவழக்கில் 'டாக்டர்' பட்டதாரிகளை 'டாக்டர்' என்றோ 'முனைவர்' என்றோ விளிக்கின்றனர். ஒருவர் பெய ருக்கு முன் 'டாக்டர் இளங்கோ', 'முனைவர் இளங்கோ' என்று எழுதுகின்றனர். தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் முனைவர் (Dr.— Doctor of Philosophy) என்ற குறியீடு பெருவழக்கில் பயன் படுத்தப்பட்டு வருகிறது. அது பிற நிறுவனங்களிலும் வழக்குப் பெற்று வருகிறது.

முனைவர் என்ற சொல் பொருத்தமுடையதாகத் தோன்ற வில்லை. உச்சரிக்கும் போதும் முனைவர் என்பது முனிவர் என்பது போல ஒலிக்கக் கேட்கிறோம். முனைவர் என்பது இறைவனைக் குறித்து வருகிறது. 'முனைவன் கண்டது முதல் நூலாகும்' என்பது காண்க. 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்று கூறும் போது பாசநீக்கம் உடைய (இருவினை நீக்கம் பெற்ற) முழுமுதல்வனைத்தான் அது குறிக்கும்.

எனவே பின்வரும் குறியீடுகளை வழங்கச் 'செந்தமிழ்' முடிவு செய்துள்ளது.

M. Phil }
M. Litt } — அறிஞர்

Ph. D. — பேரறிஞர்

D. Litt or D.Sc. or D. Phil — மூதறிஞர்

குறிப்பு : Letters (Litt); Philos (Ph. D.) என்ற சொற்களுக்கு அறிவு (Knowledge or Learning) என்பதே பொருள் இத் தமிழாக்கம் பற்றி அறிஞர்களின் கருத்துரை வர வேற்கப்படுகிறது.

நா. பாலுசாமி
பொறுப்பாசிரியர்

அறிவிப்பு

தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை

உறுப்பினராவீர்!

உயர் சலுகை பெறுவீர்!!

கடந்த சுமார் 30 ஆண்டுகளாக இயங்கிவரும் தமிழ் இறையியல் நூலோர் குழு இதுவரை 80 நூல்களை வெளியிட்டுள்ளது. இன்னும் பல அரிய நூல்கள் வெளிவர இருக்கின்றன. இக்குழுவில் உறுப்பினராயிருந்து நூல்விலையில் சலுகை பெறும் திட்டம் இடைக்காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அது மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது.

ஓராண்டிற்கான (ஏப்ரல்-மார்ச்) உறுப்பினர் கட்டணம் ரூ. 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்). அந்த ஆண்டில் வெளிவரும் நூல்கள் அனைத்திலும் 50% விலைச்சலுகை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும். 1992–1993 ஆம் ஆண்டில் வாங்குவோருக்கு ஏற்கெனவே வெளிவந்த திருமறை விளக்கவுரை (பக். 1086, முழுவிலை ரூ. 250/-) ஓர் ஊக்கச் சலுகையாக 50% விலையில் வழங்கப்படும். புதுநூல் ஒவ்வொன்றும் வெளிவந்தவுடன் உடனே உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும். தபாலில் நூல் பெறுவதாயிருந்தால் அதற்குரிய செலவை ஏற்பது வாசகர் பொறுப்பு.

ரூ. 50/-செலுத்தி உடனே உறுப்பினராவீர். பணவிடை அல்லது காசோலை (drawn in favour of "TAMIL THEOLOGICAL BOOK CLUB") வழியாக உறுப்பினர் கட்டணத்தையும் நூல்விலையையும் அனுப்புக.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

General Editor,
Tamil Theological Book Club
Tamilnadu Theological Seminary
Arasaradi,
MADURAI - 625 010
TAMILNADU : SOUTH INDIA

பாட்டும் தொகையும் - ஒரு பார்வை

பேரறிஞர். அ. மா. பரிமணம்

எட்டும் பத்தும்

தமிழ் மொழியிற் கிடைத்துள்ள பழமையான இலக்கியங்கள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் பெயரிற் போற்றிக் கொள்ளப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியம் எனப்படும் அவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டு நூல்களும்

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை"

என்னும் பிற்கால வெண்பாவையும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நெடும் பாடல்களும்,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்னும் பிற்கால வெண்பாவையும் அடியொற்றி இங்குக் குறிப் பிட்ட வரிசையில் வழங்கப்பட்டு வருகின்றன. எட்டுத் தொகை நூல்களின் காலத்தை ஆராய்ந்த பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் அவை ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்னும் வரிசையில்

அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்[1] இவ்வாறே இவர் பத்துப் பாட்டின் வரிசையினைத் தாம் வகுத்த கால முறைப்படி பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை முல்லைப்பாட்டு. சிறுபாணாற்றுப்படை, முருகாற்றுப் படை என வரிசைப்படுத்தியுள்ளார் மேலும் முதல் நான்கினை ஒரு காலப் பகுப்புளும். அடுத்த மூன்றினை இரண்டாங் காலப் பகுப்புளும், எஞ்சியதனை நர்ன்காம் காலப் பகுப்புளும் அடக்கியுள்ளார்[2]

வையாபுரியார் கணிப்பு

வையாபுரிப் பிள்ளையவர்கள் தாம் வகுத்த காலமுறைப்படி கூறும் நூல் வரிசை எதுவாயினும், அவற்றிற்கு அவர் குறிப்பிடும் காலக்கணிப்பினை ஏற்பதில் தமிழறிஞருள் மிகப்பலர் தயக்கம் கொள்கின்றனர் சில சொற்களின் ஆட்சி, சில செய்திகள் கூறப்படுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யுங்கால், அவர் ஊகம் கொண்டே முடிவு செய்கின்றார். பலவாறு விவாதித்த பின்னர்த் தொல்காப்பியர் கி.பி 5ஆம் நூற்றாண்டினர் என்றும், நெடுநல்வாடை பாடிய நக்கீரரும் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரும் வேறுபட்டவராவர் என்றும், திருமுருகாற்றுப்படையின் காலம் கி பி. 5 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்றும் கூறுவதனை அறிஞர் உடன்பட மறுக்கின்றனர் ஒரு சொல் வடமொழி, பிராகிருதம், பாலி ஆகியவற்றில் ஒன்றிலும், தமிழிலும் வழங்கக் கண்டால், அச்சொல் அப்பிறமொழியினின்றும் தமிழிற்கு வந்து வழங்கப்பட்டது என்றே பெரும்பாலும் இவர் போன்ற ஆய்வாளர் சிலர் கொள்வாராயினர். அதனால் இவர் நாட்டு மக்களின் பொதுவான சமுதாய வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தப்படும் சில சொற்களும், பிறமொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ளன எனக் காட்டியுள்ளார் புறநானூற்று முதற்பாடலில் இடம் பெறும், 'நீரறவறியாக்கரகம்' என்னும் தொடரிலுள்ள நீர் என்னும் சொல் இவ்வாறு பிறமொழியிலிருந்து வந்தது எனக் காட்டப்பட்டுள்ளது. பண்டை உரையாசிரியர்கள் 'நீர்' என்பதனைத் தமிழ்ச்சொல் என்று காட்டியுள்ளனர். அச்சொல் பிறமொழிச் சொல்லாயின் அச்சொல்லால் உணர்த்தப்படும் பொருளுக்குரிய தமிழ்ச்சொல் யாது? அச்சொல் அயற்யச் சொல்லாயின், தமிழ்ச் சொல் இல்லாத

அப்பொருளும் அயலது எனக் கொள்ளலாமா? தமிழுக்கு மூலம் வடமொழி என்றும் ஆழ அறிந்து ஆராய முற்படுவோர் தம் ஆய்வு முடிவுகள் 'வாய் போற் பொய் மொழி'யாகவே முடியும். அதனால் இத்தகையோரது சொல்வலையுட்பட்டுச் சோர்வுறாது, பாட்டும் தொகையும் ஒரு கால எல்லையுள் தோன்றிய இரு தொகுப்புகளாகக் கொண்டு, பொருட்பயன் கொள்வது தமிழ் கற்றார் கடனாகும்.

பாட்டும் தொகையும் - பெயர் வழக்கு

நற்றிணை முதலிய எட்டினையும் தொகைகள் எனவும், திருமுகாற்றுப் படை முதலிய பத்தினையும் பாட்டு எனவும் குறிப்பிடும் வழக்கு பண்டை உரையாசிரியர்கள் காலந் தொட்டே இருந்து வருகிறது. 'அது தொகைகளிலும் கீழ்க் கணக்குகளிலும் இம்முறை மயங்கி வரக்கோத்தவாறு காண்க' என்றும் 'அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகை நூல்களுக்கு நூலாகலின், அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டு மென்றுணர்க' என்றும், நச்சினார்க்கினியரும் (தொல். பொருள். அகத்.-5; புறத்-35), 'பாட்டினும், தொகையினும் வருமாறு கண்டு கொள்க' என்றும், 'பாட்டினும் தொகையினும் உள்ள சொல்லே மீட்டொரு காலத்துக்கு உரித்தன்றிப் போயினவும் உள' என்றும், பேராசிரியரும் (தொல். பொருள். செய் 50, 80) கூறியுள்ளமை கொண்டு இதனை உணரலாம். ஆசிரியர் பெயர் அறியப்படாத பிற்கால நூலான தமிழ்விடுதூதுச் செய்தியினை 'மூத்தோர்கள்— பாடியருள் பத்துப் பாட்டுமெட்டுத் தொகையும் கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்' என்னும் கண்ணியில் (தமிழ்விடு. 56) குறிப்பிடுகிறது. சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் விளங்கிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமது மனோன்மணீய நாடகத்தின் தொடக்கத்திலமைந்த தமிழ்த்தாய் வாழ்த்துக் கூறும் கலிப்பாவின் தாழிசைகள் ஒன்றில்

> பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே'

என்று பத்துப்பாட்டின் சிறப்பினைப் புலப்படுத்தியுள்ளார்.

தொகுப்பு நூல்கள்

ஒரு மொழியில் பாடல் தொகுப்புக்கள் அல்லது திரட்டுக்கள் உருவாவது அம்மொழி பேசும் மக்களின் இலக்கிய ஆர்

வத்தையும் பயன்கொள்ளும் திறனையும் நன்குணர்த்தும். கவிஞர்கள் தம் மொழியில் படைக்கும் கவிதைகள் அனைத்தையும், அவர்கள் காலத்திலோ பிற்பட்ட காலத்திலோ வாழும் மக்கள் அனைவரும் பயின்று பயன்பெறும் வாய்ப்பு உண்டாகும் என்று கூறவியலாது. நேரமின்மை, தேவை போன்ற காரணங்களால் தமக்குத் தேவையானவற்றையோ, உகப்பானவற்றையோ தேர்ந்து பயிலும் நிலை உருவாவது இயல்பே. நெடுங்காலம் போற்றிக்காத்தலும் எழுத்தாணியால் எழுதுவது எளிதல்லாத நிலையில் ஓலைச்சுவடிகளில் ஒவ்வொரு கவிஞரும் படைக்கும் கவிதைகள் அனைத்தையும் பொறித்துக்காத்தலும், படித்துப் பயன்கொள்வதும் எளிதான செயலாகா. அதனால் சில நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு கிடைக்கும் பாக்களில் சிறந்தனவற்றை, பயன்மிக்கனவற்றைத் தனியே தொகுத்துப்பேணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மிகுதியான பாடல்கள் கொண்ட நூலின்றும் தொகுப்பது, பொருள் பற்றித் தொகுப்பது, செய்யுள் பற்றித் தொகுப்பது, காலம் பற்றித் தொகுப்பது எனப் பல வகைகளில் தொகுப்பு நூல்களும், சுருக்க நூல்களும் உருவாயின. இத்தகு நூல்கள் கோதகன்ற பழச்சாறு போலப் பயன் மிகுதியும் பயப்பனவாயின.

பிற நாட்டில் தொகுப்புகள்

தமிழோடொத்த தொன்மைச் சிறப்பும் இலக்கிய வளமும் வாய்ந்த உயர்தனிச் செம்மொழியான கிரேக்க மொழியில் பண்டைக்காலத்தே இத்தகு தொகுப்பு நூல் பல உருவாகியுள்ளன. அவற்றின் பயனுணர்ந்த இலக்கியச் சுவைஞர்கள் தங்கள் மொழியிலும் அத்தகு தொகுப்புக்களை (Anthology) உருவாக்கியுள்ளனர். ஆங்கிலத்தில் பால்கிரேவ் என்பார். 'பொற்கருவூலம்' என்னும் பெயரில் (Golden Triasury) தொகுத்த தொகை நூலின் பயன் உணர்ந்து, கால அடிப்படையிலும் பிறவகையிலும் அம்மொழியில் பல தொகை நூல்களைப் படைத்துள்ளனர். இலக்கியத் துறையில் அமைந்த இத்தொகை நூற் பயனை உணர்ந்து பிற அறிவுத்துறைகளிலும், அத்துறை பற்றிய செய்திகளைத் தொகுத்தளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போர் முகத்தில் பல நாள் தங்கிப் பணிபுரியும் படைஞர் அன்றாடச் செய்திகளை அறிவதற்குத் துணையாக, செய்தித்தாள்களில் வரும் செய்திகளைத் தொகுத்து அளிக்கும் பணி மேற்

கொள்ளப்பட்டது. காலப் போக்கில் பொதுமக்கட்குப் பயன் நல்கும் வகையில் பல துறையிலும் செய்தித் தொகுப்புக்கள் மஞ்சரிகளாக, மலர்க் கதம்பங்களாக வெளிவரலாயின.

தமிழில் தொகைகள்

தமிழில் இன்று கிடைத்துள்ள பழமை சான்ற நூல்கள் அனைத்தும் தொகை நூல்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கால அரசர்களே முன்னின்று புலவர்களைக் கொண்டு பாடல்களை வகை செய்து தொகுத்துள்ளார்கள் என்பதனை அறியுங்கால், தொகுப்பு நூல்களின் பயனைப் பழந்தமிழ் மக்கள் எங்ஙனம் உணர்ந்து பயன் கொண்டனர் என்பது நன்கு புலப்படும். தொகை நூல்களுள் அடங்கிய பாடல்களைத் தவிர எஞ்சிய அக்காலப் பாடல்கள் கிடைக்கப் பெறாமை கொண்டும் தொகை நூல்களின் பயனை நன்குணர முடிகிறது. சங்கத் தொகை நூல்களுள் தம் ஒரு பாடலால் மட்டுமே இடம் பெற்றுள்ள புலவர்களை எண்ணுங்கால், அக்காலத்தே பரந்துபட்டு விளங்கிய தமிழ்ப் புலமையுலக எல்லை விரிவையும், அப் புலமைப் படைப்புக்களின் நயமுணர்ந்து தேர்ந்து போற்றும் நுட்பத்தையும் காணலாம். நீராலும், நெருப்பாலும், நீர்வாய்க் கறையானாலும் எளிதில் அழியக் கூடிய ஓலையை வாகனமாகக் கொண்டு காப்பியம். புராணம், சிற்றிலக்கியங்கள், தல புராணங்கள் தோன்றி விளங்கிய காலச் சூழலில் கரைந்துபடாமல் தொடர்ந்து வந்து இன்று அச்சுவாகனமேறி அமரநிலை எய்தித்திகழும் பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கியங்கள் தம் தரத்தால் இலக்கியவுலகில் சிறந்த இடம் பெற்றுத் திகழ்கின்றன.

சங்க இலக்கியத் தொகுப்பு நூல்களின் செல்வாக்கு, அடுத்து வந்த காலங்களிலும் தொடர்ந்துள்ளது. சங்கம் மருவிய கால நூல்களைக் கொண்டதெனக் கருதப்படும் பதினெண்கீழ் கணக்கில் இடம்பெற்றுள்ள 'நாலடியார்' என்னும் நூல் தொகுப்பு நூலாக அமைந்துள்ளது. காலப் போக்கிற்கேற்ப இந்நூல் வெண்பாச் செய்யுட்களால் தொகுக்கப்பட்டுள்ளது. பொருளமைதியிலும் அகம் புறம் எனும் பாங்கினைவிடுத்து நீதியுரைக்கும் போக்கினைக் கொண்டுள்ளது. ஏறத்தாழ 500 ஆண்டுகட்கு முன்னர்ப் புறத்திரட்டு என்னும் ஒரு தொகுப்பு நூல் தோன்றிச் செல்வாக்குப் பெற்றது. திருக்குறள் அடிப்படையில்

முப்பால் பகுப்பும் அதிகாரப் பகுப்பும் கொண்டு 1570 பாடல்களில் அமைந்த அந்நூல் புறநானூறு தொடங்கி இராமாயணம் போன்ற நூல்களினின்றும் தேர்ந்தெடுத்த பாடல்களைக் கொண்டுள்ளது இந்தத் தொகை நூலின் செல்வாக்கினால். இதனையும் சுருக்கி அமைத்துப் பயன்கொள்ளும் பாங்கில் 'புறத்திரட்டுச் சுருக்கம்' எனும் தொகை நூலும் தோன்றியது காலப் போக்கில் தத்துவ அடிப்படையிலான நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பாடல்களைக் கொண்ட 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு' போன்ற நூல்களும் தோன்றின. பின்னர் எழுந்த தனிப்பாடல் திரட்டு நூல்களும் தனிச்செய்யுட் சிந்தாமணி போன்றனவும் தொகை நூல்களின் சிறப்பினையும் இன்றியமையாமையினையும் விளக்கி நிற்கின்றன.

அண்மைக் காலத்தில் சென்னை, மர்ரே நிறுவன உரிமையாளரான திரு எஸ் ராஜம் அவர்கள் சங்க நூல்கள் அனைத்தையும் தனித்தனியே பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள் அதுகாறும் அச்சில் வெளிவந்துள்ள நூல்களையும் தமக்குக் கிடைத்த மூல ஏட்டுச் சுவடிகளையும் தக்க அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து, பிழையின்றிச் சிறந்த அமைப்பில் குறைந்த விலையில் சங்க நூல்களின் மூலத்தைத் தனித்தனியே வெளியிட்டிருப்பது போற்றத்தக்க பணியாகும். சங்கப்பாடல்களைப் பாடியோர், அவற்றால் பாடப்பெற்றோர், அருஞ்சொற் பொருள் அகரநிரல் போன்ற பயன்மிக்க குறிப்புதவி நூல் ஒன்றினையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். அந்த நூலுக்குப் 'பாட்டும் தொகையும்' எனப் பெயர் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தொகைகளும் தொகுத்தோர் தொகுப்பித்தோரும்

ஒரு நூலினைத் தொகையெனக் குறிப்பிடுவதாயின் அதனைத் தொகுத்தவர் யாவர் எனும் வினா எழுவது இயல்பே அவ்வகையில் ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய இரு தொகைகளையும் தொகுத்தவர்கள் முறையே புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரும், மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மனாரும் ஆவர் என்பதனோடு அவற்றைத் தொகுப்பித்தார் முறையே யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் ஆவர் என்னும் செய்தியும் தெரிய வருகின்றது. நற்றிணையைத் தொகுப்

பித்தவர் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி என்பதும் குறுந்தொகை தொகுத்தவர் பூரிக்கோ என்பதும். மட்டுமே அறியப்படுகின்றன. புறநானூற்றைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர் பற்றி அறியக் கூடவில்லை. கலித்தொகையின் நெய்தற்பகுதியைப் பாடியதோடு, அத்தொகையினைத் தொகுத்தும் விளங்குபவர் நல்லந்துவனாராவர். பரிபாடலுள் அனைத்துப் பாடல்களும் கிடைக்காமையாலும், பதிற்றுப்பத்தின் முதலும் முடிவுமான பகுதிகள் கிடைக்காமையாலும் அத்தொகை நூல்களைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர் பெயர்களை அறியக் கூடவில்லை.

மேற்காட்டிய செய்திகளால் சேர, சோழ, பாண்டியரென்னும் மூவேந்தர் மரபினில் சேர பாண்டிய மரபில் வந்த இருவர் இலக்கியத் தொகைப் பணியில் ஈடுபட்டுள்ளமை தெரிகிறது. பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியும், பாண்டியன் மாறன் வழுதியும் பாண்டியன் பன்னாடு தந்தான் என்பவனும், மாறன் வழுதியும் ஒருவனாகக் கொண்டால், நற்றிணையைத் தொகுப்பித்தவர் பலவராகவும் திகழ, அவருடைய 3பாடல்கள் (குறு. 270, நற். 97, 301) தொகை நூலுள் இடம் பெற்றுள்ளனவென்று கருதலாம். சங்க காலப் பெயர்களில் காணப்படும் சிறு அடைமொழியும் அப்பெயருடையார் வேறுபட்டவராவர் என்று கருதுங்கால் இவ்வாறு கொள்ளற்கிடமின்று. ஐங்குறுநூற்றினைத் தொகுப்பித்த யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, குறுங்கோழியூர்கிழாராற் பாடப்பெறும் (புறம்.17) புகழுடையோனாகவும் விளங்குகின்றான்.

அகநானூற்றினைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதியும், பெருவழுதியும் ஒருவரெனக் கொண்டால் இவனுடைய பாடல் நற்றிணை (55, 56 98), அகநானூறு (26) ஆகிய இரு தொகுப்பினுள் இடம் பெற்றுள்ளன எனக் கொள்ளலாம் அங்ஙனம் கொள்ளின், இம்மன்னன் சேரமான் மாரி வெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய ஏனைய தமிழக மன்னர்களோடு ஒருங்கிருந்த போது ஔவையாரால் சிறப்பித்துப் பாடப் பெற்றவன் (புறம். 367) என்பது தெளிவு பெறும். சோழ வேந்தருள் தொகை நூல் தொகுப்பிக்கும் பணியிலீடுபட்டவர் பெயர் இன்று அறியப்படாமை கொண்டு

அம்மன்னர்களின் இலக்கியப் பணி குறைத்து மதிப்பிடற்பால தன்று. ஐங்குறுநூற்றினைத் தொகுத்த புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரும், கூடலூர் கிழாரும் ஒருவரெனக் கொண்டால் குறுந்தொகை (166, 167, 214), புறநானூறு (229) ஆகிய தொகைகளுள் இவருடைய நான்கு பாடல்கள் இடம் பெற்றுள்ளதனைக் காணலாம். இவ்விரு நூல்களின் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் இவ்வாறே கருதி எழுதியுள்ளார்கள். பத்துப்பாட்டின் தொகுத்தோர் தொகுப்பித்தோர் பெயர்கள் அறிய இயலாவிடினும் அத்தொகையைத் தொகுத்தவர் சங்கப் புலவருள் ஒருவரேயாதல் வேண்டும் என்பதனை நச்சினார்க்கினியர் கூற்றால் அறியலாம். 'தீயினன்னவொண் செங்காந்தள்' என்னும் மலைபடுகடாத்து அடியின் (145) விளக்கவுரையில் நச்சினார்க்கினியர், ''செய்யுள் செய்த பெருங் கௌசிகனார் ஆனந்தக் குற்றமென்னும் குற்ற மறியாமற் செய்யுள் செய்தாரேல், இவர் நல்லிசைப் புலவராகார். இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் பத்துப் பாட்டினைத் தொகுத்தவரும் சங்கத்தாரே (சங்கப் புலவர்) யாவர் என்பது புலனாகிறது

தொகையுள் நானூறின் செல்வாக்கு

வாழ்வியல் கூறும் தொல்காப்பியப் பொருளதிகாரம் வாழ்க்கையை அகம் புறம் என்று இருகூறாகப்பகுத்து இலக்கணப் படுத்தியுள்ளது. அப்பொருள்மைதியின் அடிப்படையில் தோன்றிய சங்கப் பாடல்களைத் தொகுக்க முற்பட்டோரும் அகம் புறம் என்னும் இரு வகை அடிப்படையில் நூல்களை வகுத்துள்ளனர். எட்டுத் தொகையில் புறநானூறு பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றியும், பரிபாடல் அகம் புறம் ஆகிய இரு பொருள் பற்றியும், எஞ்சிய ஐந்து நூல்களும் அகப் பொருள் பற்றியும் அமைந்துள்ளன. பத்துப் பாட்டினுள் புறப் பொருள் பற்றிய பாடல்களே மிக்குள்ளன

எட்டுத் தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நான்கும் தனித்தனி 400 ஆசிரியப்பாக்களால் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எந்த நூல் முன்னர்த் தொகுக்கப்பட்டது என்பதனை உய்த்துணர்தலானன்றித் தெளிவான சான்றுகளால் கூறுவது எளிதன்று: ஆனால் 400 என்

னும் எண்ணின் செல்வாக்கு இந்த நான்கு நூல்களிலும் விளங்குவதனை எளிதில் உணரலாம். இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு முத்திறப்படும் உலகியற் செய்திகளில் அறத்தையும் பொருளையும் கூறுதற்கு 400 பாடல்கள் கொண்ட புறநானூறு என்னும் ஒரு தொகையே அமைய, இன்பத்தைக் கூறுதற்குத் தனித்தனி நானூறு பாடல்கள் கொண்ட நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய மூன்று நூல்களோடு ஐங்குறுநூறு என்னும் நூலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அகப்பாடல்களின் எண்ணிக்கை மிகுதியால் இவ்வாறு கொள்ளப்பட்டது என்று கூறலாமாயினும், இது பழந்தமிழ் மக்கள் அக வாழ்க்கையின் மாட்சியில் கொண்டிருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் காட்டுவதாக உள்ளது எனக் கோடல் ஏற்புடையதாகும். அகம் புறம் எனத் தொகைப்படுத்திய போதும், தொகைகள் அனைத்திலும் அறம் பொருள் இன்பம் பற்றிய செய்திகள் பலவும் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன.

பத்துப் பாடல்கள் கொண்டன ஒரு பகுதியாகவும் அவ்வாறு பத்துப் பகுதிகள் கொண்டன ஒரு அமைப்பாகவும் அமைய ஒவ்வொரு திணைக்கும் 100 பாடல் என்னுமாறு 500 பாடல்களைக் கொண்டமைந்தது ஐங்குறு நூறாகும். இவ்வகையில் 100 பாடல் கொண்டது பதிற்றுப் பத்து. நானூறு பாடல்களைக் கொண்ட தொகை நூல்கள் பின்னர் வந்த நாலடியார், திருக்கோவையார் ஆகிய நூல்களின் எண்ணிக்கைக்கு அடிப்படையாக அமைந்தன போலவே, பதிற்றுப்பத்து பிற்காலச் சதக நூல்கள், அந்தாதிகள் போன்றவற்றின் பாடல் எண்ணிக்கைக்கு அடிப்படையாக அமைந்தது.

அகப்பாடல் அனைத்தும் ஒரு தரத்தன

நானூறு பாடல் கொண்ட அகத்தொகைகளைத் தொகுத்தவர்கள் பாடல்களின் அடி எண்ணிக்கை கொண்டு வகைப்படுத்தியுள்ளனர். பொதுவாக 4 முதல் 8 முடியவுள்ள அடிகள் கொண்டன குறுந்தொகையிலும், 9 முதல் 12 முடியவுள்ள அடிகள் கொண்டன நற்றிணையிலும், 13 முதல் 31 முடியவுள்ள அடிகள் கொண்டன அகநானூற்றிலும் தொகுக்கப்பட்டுள்ளன. அடிகளின் எண்ணிக்கையின் பெருக்கம் சுருக்கம் கொண்டு பாடற் பொருளினை மதிப்பிடுதல் கூடாது. பாடலில் இடம் பெறும் முதல் கருப் பொருட்களின் வருணனைகளால் அடிகள் கூடுத

லும், குறைதலும் அமைந்தனவாகும். பத்துப்பாட்டில் இடம் பெறும் பட்டினப்பாலை 301 அடிகள் கொண்ட அகப்பாடலாகும். இதனிடையே வஞ்சிப்பாவடிகள் விரவி வருதலால், இது 'வஞ்சி நெடும் பாட்டு' என்றும் வழங்கப்படுகிறது. இதிலுள்ள பல அடிகளை நீங்கி,

'முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே (--) (பட். 218-220)
திருமாவளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் றோளே'
(பட். 299-310)

என்று இணைத்துக் கண்டால், முழுப்பாடலிற் கூறப்பட்ட உரிப்பொருள் மாட்சி குன்றாது விளங்கும் ஆறு அடிகள் கொண்ட ஒரு குறுந்தொகைப் பாடல் போலாவதனைக் காணலாம் இவற் றோடு மேலும் சில அடிகளைக் கூட்டி,

'மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே ( ) (பட். 214-220)
அரிமா வன்ன அணங்குடைத்துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் றோளே'
(பட். 298-310)

என்று இணைத்துக் கண்டால், ஒன்பது அடிகளில் அமையும் ஒரு நற்றிணைப் பாடல் போலாவதனைக் காணக் கூடும். மேலும் சில அடிகளை இடையில் கூட்டி,

'பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்கால்
பொற்றொடிப் புதல்வர் ஓடி ஆடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பின் ஒண்பூண்
அரிமாவன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய'- (பட். 294-99)

எனப் படித்தால் பதின்மூன்று அடிகளில் அமையும் ஓரக நானூற்றுப் பாடல் போலாவதனையும் காணலாம். பட்டினப் பாலையில் எஞ்சியுள்ள அடிகளனைத்தும் காவிரிப்பூம்பட்டினம், திருமாவளவன் பற்றிய சிறப்புக்களை விரித்துப் பேசுவனவாகவே உள்ளன.

தொகைகளிற் கடவுள்வாழ்த்து

கடவுள் வாழ்த்துப் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. அதனால் தாம் தொகுத்த சங்கத் தொகை நூல்களுக்கும் கடவுள் வாழ்த்து இருத்தல் நல்லதென்று தொகை முயற்சியில் ஈடுபட்டோர் கருதியிருக்கலாம். நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு, கலித்தொகை ஆகியவற்றிற்குத் தனித்தனியே கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன. அவை கலிப்பாவிற்குக் கலியாப்பிலும், ஏனையவற் றிற்கு ஆசிரியயாப்பிலும் அமைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பிய உரையில் கிடைத்த 'எரியெள்ளுவன்ன' எனத் தொடங்கும் பாடல் பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்தாக இருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். 'ஆயிரம் விரித்த' எனத் தொடங் கும் பரிபாடலை அந்நூலின் கடவுள் வாழ்த்தாகக் கொண்டுள்ள னர். இப்பாடலின் அடிக்குறிப்பாகக் கடவுள் வாழ்த்து என்பது மட்டுமே காணப்படுகிறது. இயற்றிய ஆசிரியர் போன்ற பிற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. 'ஆறறி அந்தணர்க்கு' எனத் தொடங்கும் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தினை, அத்தொகை நூலினைத் தொகுத்தவரும், நெய்தற்கலியை இயற்றியவரும் ஆகிய நல்லந்துவனாரே சிவபெருமான் மீது பாடியுள்ளார் என்று கருதுகின்றனர். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறு நூறு, புறநானூறு ஆகியவற்றின் வாழ்த்துப் பாடல்களைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். 'பாரதம் பாடிய' என் னும் சிறப்படை கொண்டு, இவர் நற்றிணையிலும் (83), அக நானூற்றிலும் (51) இடம் பெறும் பெருந்தேவனாரின் வேறு பட்டவராவர் என்று கருதப்படுகின்றார். சங்க காலத்தே தமிழில் பாரதம் பாடியமையால் 'பாரதம் பாடிய' என்னும் சிறப்புப் பெற்று ஒரு புலவர் விளங்கியது போல, அக்காலத்தே, இராமா யணம் பாடிச் சிறப்புப் பெற்ற புலவர் காணப்படாதது சிந்திக் கத்தக்கதாகும். பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல்களில் அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவற்றின் கடவுள்

வாழ்த்துப் பாடல்கள் சிவபரமாகவும். நற்றிணை திருமால்பரமாக வும், குறுந்தொகை செவ்வேள் (முருகன்) பரமாகவும் அமைந் துள்ளன. பதிற்றுப் பத்து, பரிபாடல் ஆகியவற்றின் வாழ்த்துக் கள் முறையே சிவன், திருமால் ஆகியோரைப் பரவுவனவாக உள்ளன. 'நீலமேனிவாலிழை' எனத் தொடங்கும் ஐங்குறு நூற்றின் பாடலே, உமைக்கு முதன்மை தருவதாகவும் கொள்ளக் கிடக்கின்றது. அப்போது நீலமேனி வாலிழையின் பாகத்துள்ள ஒருவன்' எனக் கொள்ள வேண்டும். சிவன், செவ்வேள், திருமால் ஆகியோரை வாழ்த்திப்பாடியிருப்பது கொண்டு, பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சமயப் பொறையுடைமையினை உணரலாம். பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப் படையினை வாழ்த்தாகக் கொண்டுள்ளது.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித் தொகை ஆகியவற்றின் கடவுள் வாழ்த்து நூலின் தொடக்கத்தில் நூலுக்குப் புறம்பாக அமைய, அது புறநானூற்றில் நூலின் முதற் பாடலாகவே இடம் பெற்றுள்ளது. கடவுள் வாழ்த்து புறத் திணைத்துறைகளுள் ஒன்றாக அமையுமாதலின் அது புறநானூற் றில் நூலின் முதற்பாடலாக அமைந்துள்ளது என்றும், கடவுள் வாழ்த்து அகத்திணைத் துறைகளுள் தனியே ஒரு துறையாக அமையாமையின் அகத்திணைத் தொகைகளில் அது நூலுள் அடக்காது புறம்பாகக் கொள்ளப்பட்டது என்றும் கொள்ளுவது ஏற்புடையதாகும்.

சங்கத் தொகை நூல்களை அச்சில் பதிப்பித்த பலரும் தங் கள் சமயக் கொள்கைக்கு ஏற்றவாறு பிள்ளையார் சுழி, ஸ்ரீ, கடவுள் துணை. கணபதி துணை என்று குறித்துத் தொடங்கி யுள்ளனர். இதனை வழிபடுகடவுள் வாழ்த்து வகையுள் ஓராற் றால் அடக்கி அமைதி காணலாம் என்றாலும் பதிப்பாசிரியர்கள் தாம் பார்த்த மூல ஏட்டில் உள்ளவாறே குறிப்பிட்டிருத்தல் வேண் டும். இவர்கள் பார்த்த மூல ஏடுகள் எல்லாம் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குள் பிரதி செய்யப்பட்டிருத்தல் கூடுமாதலின், அவற்றைப் பிரதி செய்தோரும் தம் சமயக் குறியினை தம் ஏட்டின் தொடக்கத்தில் எழுதியிருக்கவும் கூடும். புத்த சமயச் சார்பான மணிமேகலையைப் பதிப்பித்த டாக்டர் உ. வே.சா. அவர்கள் பிள்ளையார் சுழியும், கணபதி துணையும் எழுதியே பதிப்பித் துள்ளார்கள். ஆனால் இவற்றிற்கு மாறாக மர்ரே நிறுவனத்தார்

பதிப்பித்த சங்கத் தொகை நூல்கள் அனைத்தையும் எக்குறியும் இடாமல் பதிப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடல் எண்ணிக்கை

குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூலினைப் பதிப்பித்தவர் 'கள் தாம் விரும்பியவாறு பாடலுக்குத் தலைப்புக் கொடுத்துள்ளனர். நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பாடலாசிரியர் பெயரைத் தலைப்பாகக் கொடுத்துச் செல்லக் குறுந்தொகை உரையாசிரியர் தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று என்று கூற்று வகையால் தலைப்பிட்டுப் பதிப்பித்துள்ளார். கிடைத்துள்ள எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகையும் (1 + 150), அகநானூறும்தான் (1 + 400) முழுமையுமாகக் கிடைத்துள்ளன. குறுந்தொகை கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்கள் கொண்டுள்ளது. ஆனால், அதிலுள்ள 307, 391 ஆகிய இரு பாடல்களும் வரையறையின் மிக்கு 9 அடிகளைக் கொண்டுள்ளன. எஞ்சிய தொகையினைத் தும் சில பாடல்கள் குறைந்தும், சில பாடல்கள் மிகுந்தும், சில பாடல்கள் இடையிடைக் குறைந்தும் காணப்படுகின்றன. குறுந்தொகையில் இருபாடல்கள் எல்லை மீறிக் காணப்படுவது போன்று, நற்றிணையிலும் சில பாடல்கள் (64,181,221,372, 379, 393) பதின்மூன்றடிகள் கொண்டுள்ளன. ஆனால் அத்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல் (மாநிலம் சேவடியாக) எட்டு வரிகளே கொண்டுள்ளது. இவற்றை நோக்கும்போது மூன்று தொகை நூல்களின் (நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு) அடிவரையறை பெரும்பான்மைபற்றிக் கொள்ளப்பட்டது என்று கருதலாம். ஏடு எழுதி வந்தோர் மாறுபட்டு எழுதியிருக்கவும் கூடும். குறுந்தொகைப் பாடல்களின் அடிவரையறை மூன்று முதல் 6 அடிகளாக உள்ளது. எனவே, நான்கு முதல் முப்பத்தொன்று வரையிலான அடிகளைக் கொண்ட பாடல்களைத் தேர்ந்து அவற்றை மூவகைப் படுத்தினர் எனக் கொள்ளுவது ஏற்புடையதாகும். முப்பத்தொன்றினை மேலெல்லையாகக் கொண்டமைக்குக் காரணம் கூறுமாறில்லை.

தொடக்க நிலையில் கிடைக்கவில்லை எனக் கருதப்பட்டுப் பின்னர்ப் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ள 'சான்றோர் வருந்திய' என்று தொடங்கும் பாடல் எட்டுவரிகளே கொண்டுள்ளது. 'நெருநலும் முன்னாள் எல்லையும்' எனத் தொடங்கும்

பத்து அடிகள் கொண்ட பாடல் விடுபட்ட நற்றிணைப் பாடலாக (234) இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், தம் முகவுரையில் (நற்றிணை. கழக வெளியீடு) 'பதின்மூன்றடி முதல் முப்பத்தேழடி வரையிலுள்ள நானூறு அகவற்பாக்களைத் தொகுத்து நெடுந்தொகை எனவும்' என்று கூறியிருப்பதில் முப்பத்தேழு என்பது பிழையாகும்.

அகத்தொகைகட்கும் புறநானூற்றிற்கும் பாடல்தோறும் முறையே அமைந்துள்ள கிளவிக்குறிப்பும், திணை துறை ஆகிய பாகுபாடும் பாடல்களைப் பாடிய புலவர்களே எழுதியனவாகா. வேறுவேறு புலவரால் எழுதப்பெற்று அடுத்தடுத்து இடம் பெற்ற பாடல்கட்குத் 'திணை அது', திணையும் துறையும் அவை, 'அவளை அவர் பாடியது' எனவரும் குறிப்புக்களால் இதனை உணரலாம். மேலும், அகத்திணைப் பாடல்கள் சிலவற்றிற்கு இரண்டு கிளவிக் குறிப்புக்கள் அமைக்கப்பட்டிருப்பதாலும், அப் பாடல்கள் சிலவற்றை உரையாசிரியர்கள் வெவ்வேறு கிளவிகட்கு எடுத்துக் காட்டாகக் காட்டியிருப்பதாலும் இதனை நன்கு அறிதல் கூடும்.

சில தொடர்கள் திரும்பவும் இடம்பெறல்

பாட்டு தொகை ஆகியவற்றை முழுதுமாகக் கற்பவர்கள் சிற்சில தொடர்களும் அடிகளும் வெவ்வேறு பாடல்களில் வெவ்வேறு புலவர்களால் ஆளப்பட்டிருப்பதனைக் காணக் கூடும். இதுகொண்டு சிலர், 'சங்கப் பாடல்கள் ஒரே புலவராற் பாடப்பட்டு வெவ்வேறு புலவர் பெயர்களில் தரப்பட்டுள்ளன' என்று கூறித் தம் அறியாமையைப் புலப்படுத்தவும் முற்பட்டனர்! இத்தொகை நூல்கள் தொகுக்கப்படுமுன் இவற்றிலடங்கிய பாடல்களும், இவற்றைப் பாடிய புலவர்களின் பிற பாடல்களும் நாட்டில் நன்கு பயிலப்பட்டிருத்தல் வேண்டும். தம் காலத்திலோ தமக்குச் சிறிது முன்னரோ விளங்கிய புலவர்களின் பாடல்களில், தம்மைக் கவர்ந்த, கருத்தாழம் மிக்க தொடர்களையும் அடிகளையும் தம் பாடல்களில் இயைத்துப் பாடியுள்ளனர் என்றே கொள்ளுதல் வேண்டும். 'பொய்யா நாவிற் கபிலன்' என்றும், அந்துவன் பாடிய சந்து கெழு நெடுவரை என்றும் பிறவாறும், தம்காலத்தும் தமக்கு முன்னரும் வாழ்ந்த புலவர்களைப் போற்றியது போலவே, சங்கப் புலவர்கள் தம்மோரன்ன புலவர்கள் பாடிய பாடல்

தொடர்களையும் ஒரோ வழி எடுத்தாண்டு, 'முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம்' என்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்துள்ளனர்,

தொகைகளைப் பாடியோர் எண்ணிக்கை

முல்லை முதல் ஐந்து திணைக்குமுரிய பாடல்களைத் தனித் தனிப் புலவர்களின் பாடல்களைக் கொண்டு தொகுத்தமையால் ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றில் பாடியுள்ளவர்களின் எண்ணிக்கை பற்றிச் சிக்கல் தோன்றுவதற்கில்லை. பதிற்றுப் பத்து, பரிபாடல் ஆகிய தொகைகளிலும் ஆசிரியர் எண்ணிக்கை யில் வேறுபாடு தோன்றவில்லை. பிற எல்லா அகத் தொகை களிலும் திணைப் பாடல்கள் மாறி மாறிச் சேர்க்கப்பட்டுள்ள மையால் ஆசிரியர் பெயர் அறியப்படாத பாடல்கள், விடுபட்ட பாடல்கள், புலவர்களின் பெயர்களில் அமைந்துள்ள அடை மொழிகள் போன்றவற்றால் பாடிய புலவர்களின் எண்ணிக்கை யிலும் வேறுபாடு எழலாயிற்று. எனினும் ஆய்வாளர் சிலர் அந்த எண்ணிக்கையை ஓரளவு குறிப்பிட்டுள்ளனர். மர்ரே நிறுவனத்தாரின் நற்றிணைப் பதிப்பில் பாடியோர் எண்ணிக்கை 192 என்றும், பேரா. வையாபுரிப் பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் அவ் எண்ணிக்கை 175 என்றும் மாறுபட்டுக் காணப்படுவதற்கு முற்கூறப்பட்டதே காரணமாகும். ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகை யில் சமாச வெளியீடான சங்க இலக்கியமும், மர்ரேயின் பாட்டும் தொகையும் பாடியோர் பாடப்பட்டோர் பெயர்ப்பட்டியலைத் தந்துள்ளன. சமாச சங்க இலக்கியப்படி, பாட்டும் தொகையும் கொண்டுள்ள பாடல்கள் எண் 2381. (ஆசிரியர் பெயர் அறிந்த பாடல்கள் 2279 + அஃது அறியப் படாத பாடல்கள் 102). என்றும், பாடிய புலவர்கள் எண் 473 என்றும் தெரிகிறது. இப் புலவர் எண்ணிக்கை மிகவும் துல்லியமாக அறியப்பட்டது என்று கூற இயலாவிடினும், சங்கத் தொகைகள் தொகுக்கப்பட்ட காலத்தில் தமிழகத்தில் 473 புலவர் இருந்துள்ளனர் என்னும் உண்மைமறுக்க முடியாததாகும். தொகையுள் அடங்காது மேலும் புலவர்கள் பலர் இருந்திருக்கலாம். அறிந்த புலவர்களுள் பெண் பாற்புலவர்கள் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இவற்றைக் கருதுங்கால் அக்காலத்துத் தமிழகத்தே விளங்கிய கல்வி நிலை நன்கு புலனாகும். (தொடரும்)

ஆங்கிலத்தில் அகநானூறு

களிற்றியானை நிரை-பாலை

(பிரிவிடை யாற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது)

வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொதினி யாங்கண்

சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொற்றாம்
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக

அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் துலறிய மரத்த அறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடியச்

கரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவழி எடுப்ப ஆருற்
றுடைதிரைப் பிதிர்வில் பொங்கிமுன்
கடல்போல் தோன்றல காடிறந் தோரே.

— மாமூலனார்

Akananuru-Poem No. 1

The pining heroine speaks to her companion when the hero is away in a foreign land)

Oh *my friend,*
Our lover crossed a wilderness causing our bamboo-like shoulders grow weak
To fetch a wealth of auric jewels from a distant land.
The land is terribly hot scorched by the summer
When the orb of the sun burns like flaming fire
Causing the earth lose all its virdiscence
And causing fissures everywhere;
The trees are parched and the shades become scarce;
The once fresh springs amidst the rocks have gone totally dry
And the grains that fall into them get fried.
The paths are desolate without human traffic
And the highwaymen remain idle at their houses;
The white blooms in the swaying branches of the nonfibrous Murunkai trees
Are lifted away by the swiftflowing whirlwind
And they lie scattered everywhere and cause the jungle look
Like a sea whose waves throw ashore white foam;
Has our lover now forgotten his plighted words
That he would remain inseparable with me
Like the pieces of whetting stone, held together
By the gum used by the Karotan of lowly profession
At Potini abounding in elephants, their tusks cut and *trimmed*
By Avi, a renowned chief of the Velir clan
Who equals Lord Murukan in the art of war
And who vanquished the Mazhva warriors that adorn themselves
With flower-wreaths *buzzed by the bees and heroic anklets*
Riding steeds that strike horror in the foes?

— MAMULANAR

Karotan–The worker who sharpened the weapons with the help of the whet stone.

Velir–The clan of minor chieftains that ruled parts of ancient *Tamilnadu.*

(ஆங்கில ஆக்கம்—
பேரா. பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை)

தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்

மு. இராகவையங்கார்

தொல்காப்பியம் நூன்மரபில் எழுத்துக்களின் பெயர் முறை தொகை முதலியவற்றை விளக்குமிடத்தே, எழுத்துக்களின் வரி வடிவுகளையும் கூறப்புக்க ஆசிரியர் தொல்காப்பியனார், அவ்வெழுத்துக்களின் உருவங்கள் இன்னவாறு என்பதை முழுதுங் குறியாது, அவற்றின் ஒருசார் உறுப்பினையே கூறிச்செல்லுதல் காணலாம்.

> ''புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
> உருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்
> ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
> ஆயிரண் டென்ப வுயிர்த்த லாறே''

என்ற சூத்திரத்து—மெய்யும் உயிருங் கூடிப் புணருமிடத்து மெய்யின் வடிவு, திரியாதுந்திரிந்தும்நிற்கும் என்று பொதுப்படக் கூறினரேயன்றி அம்மெய்களின் உருவம் இன்ன என்று ஆசிரியர் விளக்காமையுங் காண்க. இதனால், தொல்காப்பியனார் காலத்தில் எழுத்துக்கள் வரிவடிவுடையனவாய் யாவரானுந் தெளிய அறியப்பட்டிருந்தன என்பதும், அதனால் அவ்வடிவுகளை விரித்துரைக்க அவர் முன்வந்திலர் என்பதும் அறியப்படும். படவே, நன்னூலார் கூறியவாறு, 'தொல்லை வடிவினவெல்லா வெழுத்தும்' என்பதே தொல்காப்பியனார் கருதியதும் என்பதாயிற்று. ஆயினும், அத் தொல்லைவடிவுகளிற் கண்ட ஒருசார்குறியை மட்டும் விதிமுகத்தானும் உடம்பொடுபுணர்த்தலானும் அவ்வாசிரியர் விடாது கூறிச்செல்லுதல் குறிப்பிடத்தக்கது, அஃதாவது —அவ்வெழுத்துக்களுட் பல புள்ளிபெற்றுநிற்கும் நிலைமையேயாம். உயிர், மெய், சார்பிற்றோற்றம் என்ற மூவகைப்பட்ட எழுத்துக்களினும் அங்ஙனம் புள்ளிபெறுவனவற்றைப்பற்றி அசிரியர் கூறுவனவற்றை ஈண்டு விளக்குவேன்.

I. புள்ளிபெறும் மெய்கள்

நெடுங்கணக்கினுள் தனிமெய் பதினெட்டும் புள்ளிபெற்றே நிற்கும் என்பதனை—

''மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்'' (15)
''மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்'' (104)

என்ற இரண்டு சூத்திரங்களால் விதித்தும், 'மஃகான்புள்ளி' 'யாமுவென்னும் புள்ளி' என்பனமுதலியவற்றால் உடம்பொடு புணர்த்தும் தொல்காப்பியர் கூறுதல் காணலாம். 'புள்ளி' என்று மெய்கட்குக் குறியிட்டு அவர் ஆளுவதும் புள்ளியின்றித் தனி மெய்கள் வழங்கா என்பதைக் குறிப்பிக்கும். 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல் என்பதனால், அம்மெய்கள் புள்ளிபெறு வது அடிப்பட்டமரபென்பதும், எழுதுவோரது சோர்வால் அம் மரபு தவறநேர்ந்தவிடத்துச் சொற்பொருளுணர்ச்சி சிதைந்து வந்தமையின் புள்ளியிடுவதை ஆசிரியர் வற்புறுத்தலாயினர் என்பதும் புலப்படக்கூடியன. இவற்றால் தொல்காப்பியனார் காலத்தே தனிமெய்கள் புள்ளியிடாமல் எழுதப்பட்டனவல்ல என்பது தெளியப்படும்.

II. புள்ளிபெறும் உயிர்கள்

மெய்கட்குப் புள்ளிவிதித்த ஆசிரியர் உயிர்களுட்சிலவும் அதுபெற்றுநிற்கும் என்பதனை—

''எகர ஒகரத் தியற்கையு மற்றே''

என்று அடுத்தசூத்திரத்தாற் கூறுகின்றார். பன்னீருயிர்களுள்ளே எகர ஒகரங்கள் மட்டும் புள்ளிபெறுவது பண்டைவழக்கென்பது —'எகரவொகரத் தியற்கையும்' என்பதனால் அறியப்படும். இதனால், குறிலும் நெடிலுமான அவ்விரண்டுயிர்கட்கும் வரி வடிவு பொது என்பதும், அவற்றுட் குறிலின் வேறுபாடுதோன்ற அதற்குப் புள்ளியிடப்படும் என்பதும் பெறப்படுகின்றன. ஆயின், குறிலின் நீட்சியே நெடிலாதலின், அந்நெடிலின் வேறுபாடு விளங்க அதற்குப் புள்ளியையிடாமற் குறிலுக்கிட்டதன்கருத்து என்னை என்ற கேள்வி, இங்கு உண்டாதல்கூடியதே. இதற்கு இரண்டுவகையாகச் சமாதானங் கூறலாகும். ஆரியமொழியுள் குறிலன்றி நெடில் ஏகார ஓகாரங்களே வழங்குதலும், அவற்றின் குறில்கள் தமிழ்க்குரிய சிறப்பெழுத்துக்களாதலும் நன்கறியப்

பட்டவை. அவ்விருமொழிகட்கும் பொதுவாகவமைந்த எ,ஒஎன்ற வடிவுகளை ஆரியத்திற்போல நெடிலொன்றுக்குமேகொண்டு, அவற்றின் குறில்களுக்குரியனவல்ல என்று தமிழில் விலக்காமைப் பொருட்டு, அவற்றுட்குறிலெகர ஒகரங்கட்குப் புள்ளியிட்டு வேற்றுமைப்படுத்திருத்தல் கூடும். அன்றேல், மாத்திரை குறுகிய எழுத்துக்கட்கே புள்ளியிடுவது மரபு என்பது, இனிக்கூறப்புகும் குற்றுகர குற்றிகர முதலியவற்றின் வடிவுகளாலும் விளங்குதலின் அங்ஙனம் குறுகிய எழுத்துக்கட்கு இட்டுவந்த புள்ளியை, ஏகார ஓகாரங்கட்கன்றி அவற்றின் குறில்களுக்கே வழங்கியிருத்தல் வேண்டும். இவற்றுள் ஏற்புடையது கொள்க. பிற்காலத்தார் சிலர் நெடிலேகாரவோகாரங்களே புள்ளிபெறுவனவாக்ககருதி யெழுதியது,* முன்னைவழக்கறியாமையாலென்க.

இங்ஙனம் குறிலின்குறியாகப் புள்ளியிட்டுவந்த வழக்குத் தனி எகர ஒகர உயிர்கட்குமட்டுமன்றி மெய்யூர்ந்த அவ்வுயிர்கட்கும் உண்டென்பது உரையாசிரியர் முதலியோர் உரைகளான் உணர்க. 'எகரவொகர மெய்துமெய் புள்ளி' என்ற நன்னூற் சூத்திரப்பகுதிக்கு— 'தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமும் தனிமெய்களும் பெறும் இயல்பாகிய புள்ளியைப் பிற்காலத்து ஒழித்துவரைந்து, ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்படவழங்கும் வழக்கினையுடையவன்றித் துணியப்படுந் தொல்லைவடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்' என்றெழுதிய சங்கரநமச்சிவாயப் புலவர் உரை ஈண்டு அறியத்தக்கதாம். இதனால், புள்ளியிடும்வழக்கைப் பின்னோர் நெகிழவிட்டமையால், பொருளில் தடுமாற்ற முறநேர்ந்தசெய்தி நன்கு விளங்கும். எகரவொகரங்கட்குப் புள்ளியிடும்வழக்கு நன்னூலார் காலத்தும் பயின்ற தென்றே சொல்லாம். அவர்காலத்து வழக்கின்றேல், இவ்வெழுத்துக்களும் மெய்களும் ஒழிய ஒழிந்தவற்றுக்குப் புள்ளியில்லை என்பதுபட—

---

* இராமாநுச காண்டிகை; பிற்காலத்தில், எகரத்தினின்று ஏகாரத்தை வேறுபடுத்தக் கீழ்க்கோடிழுக்கப்படுமுறையில், ஏகார நெடிலுக்கே புள்ளியையிட்டு இன்னோர் வேறுபடுத்தலாயினர் போலும். ஏகாரநெடிலுக்குக் கீழ்க்கோடிழுக்கும் முறையை உண்டாக்கியவர் வீரமாமுனிவர் (Beschi) என்பர் சிலர். (Burnell's S.I. Poleography, p.5). ஆனால் அங்ஙனம் கோடிழுப்பது, அம்முனிவர்க்கும் முற்பட்ட சாஸனவழக்காயிருத்தலால், அக்கூற்றுப் பொருந்தாதாம் (T.A.S.Vol.i.p. 202)

''தொல்லை வடிவின் வெல்லா வெழுத்ும்மண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி''

என்று, புள்ளியெழுத்துக்களை அவ்வாசிரியர் விதந்து ஓதாரென வுணர்க. பிற்காலத்துப்போலவே நன்னூலார் நாளிலும் புள்ளியிட் டெழுதுவதிற் பொதுவாகவே சோர்வுநாட்டப்பட்டுவந்ததென் பதற்கு, அவர்காலத்துச் சாஸனங்களே தக்க சான்றாயுள்ளன. அவற்றில் மெய்கட்குப் புள்ளியிடுவதே அரிதாகக் காணப்படு நிலையில், எகர, ஒகரங்கட்குப் புள்ளி காணாமை வியப்பிற்குரிய தன்று. ஆயினும், அக்காலத்துச் தமிழறிஞர் தனித்தும் உடம் பூர்ந்தும் வரும் எகர ஒகரங்கட்குப் புள்ளியிடும் வழக்கைப் போற்றிவந்தவர்களேயாவர். மாத்திரைச்சுருக்கத்துக்குத் தண்டி யலங்காரமுடையார் காட்டிய மேற்கோளில்,

''நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்''

எனவரும் வெண்பாப்பகுதி இங்கறியத்தக்கது. நேரிழையார் கூந்தல்—ஓதி: அது புள்ளி பெறவே ஒ்தி என்றாகி மரத்தைக் குறிக்கும்; நீர்நிலை ஏரி: அது புள்ளி பெறவே எ்ரி என்றாகி நெருப்பைக் குறிக்கும்—என்பது இப்பாடற்கருத்தாய் எகர ஒகர வுயிர்கள் புள்ளிபெற எழுதப்பட்டு வந்த பழையவழக்கைத் தெளி வாக்குதல் காண்க.

இனி மெய்யூர்ந்த எகரவொகரங்கள் புள்ளிபெற்றுவழங்கின என்பதற்குப் பழைய நூற்பிரமாணங்காண்டல் அரிது. ஆயினும், தந்திவர்மன் (கி.பி. 800-840) என்ற பல்லவனது 4-ம் ஆட்சி வருஷத்தே திருவெள்ளறைக் கிணறொன்றில் வெட்டப்பட்டுள்ள சாஸனத்தில்,* மெய்யூர்ந்த எகரவெழுத்துக்கள்,—நான்காவ தெ்டுத்து' 'பெ்ருங்கிணறு' 'செ்ய்து' என்றிவ்வாறு தகர பகர சகரங்களின்மேற் புள்ளியிட்டு வரையப்பட்டுள்ளன. மெய்யூர்ந்த ஒகரத்துக்கு இத்தகைய பிரமாணங் கிடைத்திலது. குறிக்கலா யினர் என்றும் கருதவும் இடமுண்டு. இவ்வாறாயின், விஸர்க்க வடிவும் ஆய்தவடிவும் ஒன்றாகவே முடியத் தடையில்லை. அடுப்புக்கூட்டை அவ்வுரைகாரர் உவமையாகக் காட்டியது கண்டுப் பெரும்பான்மை உருவொத்தல் பற்றி என்றே கொள்க.

---

* The Journal of the S.I. Association, Oct., 1910, p.173.

இனி, ஆய்தம் முப்புள்ளியினதாக உரைகாரர்கள் எழுதி வருவதற்குப் பழைய நூற்பிரமாணங் காணப்படாமை குறிப்பிடற்குரியது. 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளியும்' எனத் தொல்காப்பியனார் அதன் வடிவு கூறிற்றிலரோ எனின், அதனை ஈண்டு ஆராய்வேன். தொல்காப்பியநூன்மரபில்—

> ''அவைதாம்
> குற்றிய லிகரங் குற்றிய லுகரம்
> ஆய்த மென்ற
> முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன''

என்பது சார்பெழுத்துக்களைப் பற்றிய சூத்திரம். இதற்கு—'மேற் சார்ந்து வரும் எனப்பட்டவைதாம் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவும் ஆம்; அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒரு தன்மையவாய் வழங்கும்' என்பது நச்சினார்க்கினியருரை. உரையாசிரியராகிய இளம் பூரணவடிகளும் இக்கருத்தேபடப் பொருளெழுதிக் 'குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என எண்ணும்மை விகாரத்தாற் றொக்கன' என்றார். இவற்றால் 'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்துக்கு— 'ஆய்தமென்ற' என்ற தொடரை மட்டும் விசேடணமாக்கி— 'குற்றிகரமுங் குற்றுகரமும் ஆய்தமாகிய முப்புள்ளியும்' என அவ்வுரையாளர்கள் பொருள்கொண்டனர் என்பது புலப்படும். ஆயின், இதுவே தொல்காப்பியனார்க்குங் கருத்தென்பதற்குச் சூத்திரப்போக்கு அத்துணை அனுகூலமுடையதாகத் தோன்றவில்லை. இதுவே கருத்தாயின், எண்ணும்களைக் குற்றிகர குற்றுகரங்கட்குங் கொடுத்து மயங்கவையாது அவர் சூத்திரித்திருப்பர். அங்ஙனமன்றி, முற்றும்மை ஒன்றே கொடுத்து முடித்தெண்ணினமையான், குற்றியலிகரங் குற்றியலுகரம், ஆய்தமென்ற, முப்பாற்புள்ளியும்' என்பதற்கு அம்மூவகைப்பட்ட புள்ளியெழுத்துக்களும் என்பதே ஆசிரியர் கருதியபொருளாம் என உணர்க, 'ஆய்தமென்ற என்பது 'சொற்சிரடி' என்று நச்சினார்க்கினியரே எழுதுவர். இங்ஙனம், அத்தொடரைச் சொற்சிரடியாக்கி ஆசிரியர் தனியே பிரித்த கருத்து —'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்தை ஆய்தத்துக்கே உரியதாகக் கொண்டு உலகமயங்காமைப் பொருட்டே என்பது நோக்குவார்க்கெல்லாம் நன்கு விளங்கும். எனவே, 'முப்பாற்புள்ளியும்' என்பதற்குச் சார்பெழுத்துக்கள் மூன்றுமே விசேடணங்களென்

பதும், அம்மூன்றும் புள்ளிபெறுவனவாதலின் 'முப்பாற்புள்ளி' எனப்பட்டதென்பதும் தேற்றமென்க. தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியுள் ஆசிரியர் சிவஞானமுனிவரும்—

''ஒரு மொழியைச் சார்ந்து வரும் இயல்பன்றித் தனித்தியங்குமியல்பு தமக்கில என்றலின் அவை தம்மை எடுத்தோதிக்காட்டலாகாமையின், வருஞ்சூத்திரத்தால் அவற்றுக்கு வேறு வேறு பெயரிட்டு—'அவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம்' என்றும், அம்மூன்றும் புள்ளி பெறுதல் பற்றிப் பொதுப் பெயராக் 'முப்பாற்புள்ளியும்' என்றும் ஓதினார்.''

என்று மேற்கூறிய கருத்தேபட எழுதிச்செல்லுதல் ஈண்டு அறிந்து போற்றத்தக்கதாகும். இங்ஙனம், ஆய்தத்துக்கே முப்பாற்புள்ளியை உரியதாக்கி உரைகாரர்கள் கூறிப்போந்த பொருளினின்றே மூன்று புள்ளியுடையதாக அவ்வாய்தங் கருதியெழுதப்பட்டதென்றே தோற்றுகின்றது. அதனால், நச்சினார்க்கினியர் குறித்தவாறு, விஸர்க்கம்போல இருபுள்ளிகளுடையதாக இவ்வெழுத்து அசிரியர் காலத்தும் வழங்கிய தெனலே பொருத்தமென்க ஆயின், இத்தகைய ஆய்தவடிவு பழைய சாஸன முதலியவற்றிற் காணப்படவில்லை. 8ஆம் நூற்றாண்டில் பல்லவமல்லன் காலத்ததாக அமைந்த கசகுடிபட்டயத்துள்*—'வெஃகா' என்ற சொல் வருமிடத்து, என்று, மேலும் கீழும் புள்ளிகளும், இவற்றிடையே சிறிதுவளைந்த கோடும் உடையதாக ஆய்தம் வரையப்பட்டுளது. இஃது அக்காலத்துவழங்கிய அவ்வெழுத்தின் மாதிரிகையாகக் கொள்ளத்தடையில்லை. ஆய்தம் என்ற வடசொற்கு 'நீண்டது' என்பது பொருளென்பராகலின், ஈண்டு நீண்டகோடுள்ளது எனல் பொருந்தும். [பலவகைவடிவுகளைக் கூறுமிடத்து நன்னூற் பழைய உரைகாரரான மயிலைநாதர்—'சதுரம், ஆயதம், வட்டம், முக்கோணம், சிலை' என்றின்னவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் இவ்வாய்தமும் ஒன்றாய் நீண்ட வடிவினைக் குறித்தல் காண்க.] இதனால், நீண்டகோடுள்ளதாய்ப் புள்ளிபெறுதலின் அவ்வாய்தமே, ஆய்தம் என்றும் ஆய்தப்புள்ளி (38) என்றும் வழங்கலாயிற்றுப் போலும்—என்று சாஸனவெழுத்தமைதிகொண்டு நாம் கருதலும் பொருத்தமுடைய

---

* S.I.I. Vol. ii. No. 73 — KasakndiPlates of Nandivarman, Plate, XV

* நன்னூல், 458, மயிலைநதருரை

தாகின்றது. பல்லவசாஸனத்துக் கண்ட இவ்வாய்வடிவைப் போலவே, வடமொழி விஸர்க்கத்துக்கு—மேலுங் கீழும் அமைந்த இரட்டைப்புள்ளி வடிவேயன்றி, ÷ —என இடைக்கோடு வளை வின்றியும் பிற்பட்ட பாண்டியசாஸனமொன்றில் காணப்படுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கதாகும். ஆகவே ஆய்தச்சொல்லின் மூலம் ஆஸி தமாயினும், ஆயதமாயினும், அவ்வெழுத்துக்கும் விஸர்க்கத் துக்கும் ஒலிவடிவும் வரிவடிவும் ஒன்றாகவே ஆசிரியர்காலத்தில் அமைந்திருந்த தென்பதும், முப்பாற் புள்ளியினதாக அது கருதப் பட்டது மிகப் பிற்காலத்தேதான் என்பதும் மேற்கூறியவற்றி னின்று நன்கு பெறப்படுகின்றன.

இனி, எழுத்துக்களின் பிறப்புமுறையைக் கூறிவருமிடத்தே ஆசிரியர் தொல்காப்பியனார்—

''சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்'

என்ற சூத்திரத்தால், குற்றிகர குற்றுகர ஆய்தங்களாகிய சார்பெ ழுத்துக்களின் தோற்றவியல்புங் கூறுவர். குற்றுகர குற்றிகரங்கள் தத்தஞ்சார்பாகிய வல்லெழுத்துக்களின் சிறப்புப் பிறப்பிடங் களையே தமக்கும் உரியனவாகக் கொண்டு ஒலித்தல்போல ஆய்தமும் கொண்டொலிக்கும் என்பது இச்சூத்திரத்தால் அறிய லாகும். எனவே, ஆய்தம் தன்சார்பாய வல்லெழுத்தின் தன்மைய தாமன்றித் தனக்கென்று பிறிதோரொலி உடையதன்று என்பதா யிற்று. அஃதாவது-ககரத்தின்மிசை கஃகரொதி என்பதிற் போல வும், சகரத்தின்மிசை நியாயம் விஸாந்தி என்பவற்றிற்போல வும், தகரத்தின்மிசை கஃதவதி, என்பவற்றில் ஒலிபோலவும், பகரத்தின்மிசை கவேவதி—என்பதிற்போலவும் நகரத்தின்மிசை (குதிரைக்குத் தெலுங்கர் கூறும்) 'குர்ரம்' என்பதன் ஒலிபோல வும்—ஆய்தம் ஆசிரியர்காலத்தே உச்சரிக்கப்பெற்று வழங்கிய தென்பதாம். இப்பொழுது நகரத்துக்கு முன்வரும் ஜிஹ்வாமுலீய ஒலியே ஏனைவல்லெழுத்துக்கட்கு முன்வரும் ஆய்தவொலியாக வழங்குவதாயிற்று. ஆயினும், அத்தகைய உச்சரிப்புத் தொல் காப்பியர்காலத்து வழக்கன்று என்பதற்கு—'ஏனைமூன்றுந்

* Dalayay Agraharam Plates T.A.S. Vol.i.pp.126-7.

தத்தஞ் சார்பிற்பிறப்பொடு சிவணி...தம்மியல்பியலும்' என்று ஆசிரியர் வற்புறுத்துக் கூறுவதே தக்கசான்றாகும்.

VI. புள்ளிபெறும் மகரக்குறுக்கம்

தொல்காப்பியனார், மகரம் தன்மாத்திரையிற் குறுகிவருமிடத்தைக் குறித்துப் பின்—'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' என்று தனியே சூத்திரமொன்று கூறுகின்றார். இதற்கு, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும்—மகரக்குறுக்கங்கூறிய மேற்சூத்திரத்திற்கண்ட மகரமே ஈண்டு அதிகாரப்பட்டு நின்றதாகக் கொண்டு 'பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது இச்சூத்திரம்' என அவதாரிகையும், 'புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும்புள்ளி மகரத்துக்கு வடிவாம்' என்று பொருளும், புறத்துப்பெறும் புள்ளியாவது 'அடுத்துவருஞ் சூத்திரத்து மெய்கட்குக் கூறும் புள்ளி' என்று விசேடமுங் கூறுவர். இவற்றால், 'ப்' என்ற பகரவடிவின் உள்ளிடமாக 'ப்' என்று மற்றொரு புள்ளியையிடின் அது மகரத்தின் வடிவு என்பதைக் குறிக்கவந்ததே இச்சூத்திரம் என்று. அவ்வுரையாளர்கருதியமை விளங்கும்.

இங்ஙனம் உரைகாரர் கருதினும், 'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' என்று ஆசிரியர் கூறிய சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து, அச்சூத்திரம், மகரத்தின் வடிவையன்றி, மகரக்குறுக்கத்தின் ஒரு சார் உருவத்தையே குறிப்பதாதல் வேண்டும் என்பது, இப்போது 'தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்' உதவிப்பதிப்பாசிரியராகவுள்ள என் நண்பர் ப்ருஹ்மஸ்ரீ பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியவர்களது (M.A., L.T.) கொள்கை. அவர்கள் அங்ஙனம் கருதற்குற்ற காரணம் அடியில் வருமாறு:- உட்பெறுபுள்ளி கூறும் இச்சூத்திரத்துக்கு முன்சூத்திரம்—

> ''அரையளவு குறுகன் மகர முடைத்தே
> இசையிட னருகுந் தெரியுங் காலை''

※ பஃது என்பது—காதபதி என்பதிற் போலச்—சார்ந்த தகரத்தின் ஒலி பெற உச்சரிக்கப்பட்டதுபற்றியே, அவ்வாய்தம், தன்னோடு ஒலியாற் பெரிது மொத்த தகரவொற்றின் தன்மையாய்ப் பத்து எனவும் ஆசிரியர் காலத்தே வழங்கலாயிற்றென்க. அஃதை (= அதனை) என்பதை அத்தை—என இக்காலத்தார் வழங்குவதுங் காண்க.

என்பது. 'வேறோர் எழுத்தினதுஓசையின்கண் மகரவொற்றுத் தன் அரைமாத்திரையிற் குறுகிச் சிறுபான்மையாக வரும்'என்பது இதன் பொருளாம் மெய்களும் சார்பிற்றோற்றத்து மூன்றும் அரைமாத்திரை பெறுதலும், அவற்றுள் மகரமெய்மட்டும் கால் மாத்திரைபெறுமாறு கூறி, அடுத்து 'உட்பேறு புள்ளி யுருவா கும்மே' என்று ஆசிரியர் முறையே குறித்தலால், முன் சூத்திரத்து வந்த மாத்திரை குறுகிய மகரமே ஈண்டு அதிகாரப்பட்டதென் பதன்றிக் குறுகாத மகரமெய் அதிகாரப்பட்டதெனல் இயையா தாகும். அன்றியும், மெய்களின்வடிவை 'மெய்யினியற்கை புள்ளி யொடு நிலையல்' எனப் பின்வருஞ் சூத்திரத்தால் ஆசிரியர் கூறுதலின், பகரத்தோடு மகரத்திடைவரிவடிவு வேற்றுமைசெய் தற்கு இச்சூத்திரம் முன்னின்ற தென்பது பொருத்தமுமன்று. இவற்றால், அரைமாத்திரையவாகிய மெய்களும் சார்பெழுத்துக் களும் புள்ளிபெறுவன என்று கூறியவாறே—ஈண்டு—மகரம் தன் அரைமாத்திரையிற் குறுகுமிடத்து ஒற்றுக்குரிய புறப்புள்ளியோடு, மகரச்சுழியினுள்ளாக மற்றொருபுள்ளியும் பெற்றுவரும் என்று ஆசிரியர் கூறினர் எனவுணர்க. குற்றிகர குற்றுகரங்கள்போல மகரக்குறுக்கமும் சிறப்புப்புள்ளிபெற்று முன்பு வழங்கிவந்த தென்பது, வீரசோழியஞ் சந்திப்படலத்து 19ம் செய்யுளுள்—

'முன்வயிற்கால் வவ்வரின்-வருமொழிமுதல் வகரம் வந்து புணர்ந்தால், அந்த மகரமானது குறுகிக் கால்மாத்திரையாய் உட்புள்ளி பெறும்'

'The Bishop Heber College Magazine-என்ற பத்திரிகை யில் இவர்களால் எழுதப்பட்டுள்ள 'தொல்காப்பிய ஆராய்ச்சி', 101, 102-ம் பக்கங்கள் என்று பெருந்தேவனார் எழுதும் உரை விசேடம் ஈண்டு அறிந்து மகிழத்தக்கது. இப்பிரமாணவுண்மை யும் சாஸ்திரியவர்களால் அன்புடன் எனக்கு அறிவிக்கப்பட்டதே யாம்.

V. காலுக்குப்பிரதியாக வழங்கிய புள்ளி

''புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே'' (17)

என்ற சூத்திரத்தால், மெய்யும் உயிருங் கூடுமிடத்து, மெய்கள் வடிவு திரியாதுந் திரிந்தும் நிற்றலை ஆசிரியர் கூறுவர். இவற்றுள் திரிந்து நிற்கும் உயிர்மெய்களின் வடிவுகளைக் குறிக்குங்கால், நச்சினார்க்கினியர்—

'உருவுதிரிந்துயிர்த்தலாவது—மேலுங் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி, கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு, கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன, கெ, கே முதலியன கோடுபெற்றன. கா, ஙா முதலியன புள்ளிபெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார். கொ, கோ, ஙொ ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடன்பெற்றன.

என்று குறிப்பிடுகின்றார். இவற்றால் கா, ஙோ என்பவற்றின் அருகிலுள்ள கால்கள் முற்காலத்தே புள்ளிகளாக எழுதப்பட்டன என்பது அவ்வுரைகாரர்கருத்தாதல் விளங்கும். இம்முறையைச் சாஸனங்களிலேனும், வேறு பழம்பிரதிகளிலேனும் காண்டல் அரிதேயாம். ஆயினும், தண்டியலங்காரத்தில் மாத்திரைச் சுருக்கத்துக்குக் காட்டப்பட்ட வெண்பாவொன்று, இத்தகைய வழக்குண்மையைக் குறிப்பிடுவதாகவே தோற்றுகின்றது. அது வருமாறு:—

''நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்—சீரளவும்
நாட்டொன் றொழிப்ப விசையா மதனளவு
மீட்டொன் றொழிப்ப மிடறு'' என்பது.

'மகளிர் கூந்தற்பெயரான 'ஓதி' என்பதனுட் புள்ளியிடின் 'ஒதி' என்றாகி மரமொன்றனைக் குறிக்கும். நீர்நிலையின் பெயரான 'ஏரி' என்பதனுட் புள்ளியிடின் 'எரி' என்றாகி நெருப்பைக் குறிக்கும். காட்டின் பெயரான காந்தாரம் என்பதில் ஒன்றைக் குறைக்கக் கந்தாரம் என்றாகிப் பண்ணைக்குறிக்கும். அக்கந்தாரச் சொல்லினும் ஒன்றைக் குறைக்கக் கந்தரம் என்றாகி மிடற்றைக் குறிக்கும் என்பது இப்பாட்டின் பொருள். இதன்கண், 'காட்டொன்றொழிப்ப' 'மீட்டொன்றொழிப்ப' என்பவற்றிலுள்ள 'ஒன்று' என்பது, 'புள்ளிபெற' என மேல்வருந் தொடர்கள் கொண்டு அப்புள்ளியினையே குறிப்பதென்றும், அதனால் 'ஒன்றொழிப்ப' என்பதற்குப் 'புள்ளியைக் குறைக்க' என்பது

பொருளாமென்றுங் கொள்ளத்தக்கன. இவ்வாறன்றி, ஒருசார் உயிர்மெய்களின் குறியாக இடப்படும் காலை (ா) யே 'ஒன்று' என்ற சொற்கள் குறிக்க வந்ததாகக் கொள்ளுதல் ஏற்புடையதன்று. ஆதுவே கருத்தாயின், 'கூந்தலினோர் புள்ளிபெற' 'நீர் நிலையோர் புள்ளிபெற' என்று மேற்கூறினாற் போலவே 'காட்டிலோர் காலொழிய' 'மீட்டுமோர் காலொழிய' என்றவாறு, இன்னதொழிய என்பது விளங்கப் பாடப்பட்டிருக்கும். அங்ஙனமின்மையால், ஒன்றென்பன புள்ளியையன்றி வேறுகுறிக்குமெனல் இயையாதென்க. எனவே, புள்ளியைக்கூட்டுவதாலும், அதனைக் குறைத்தலாலும் எழுத்தளவு சுருங்கிவரும் 'மாத்திரைச்சுருக்கம்' என்ற சொல்லணியின் இருவேறு வகைக்கும் உதாரணங்கள் கூற வந்ததே இவ்வெண்பா என்பது நன்கு பெறப்படும். கந்தரம் என்றவாறு முன்பு எழுதப்பட்டுவந்த புள்ளியே பிற்காலத்துக் காந்தாரம் என்றவாறு காலாக மாறியது என்று எழுதிய நச்சினார்க்கினியர்கூற்றை, இவ்வாறு பழைய பாடலொன்று ஆதரித்து நிற்றல் கண்டுகொள்க.*

VI. புள்ளிபெறும் வேறெழுத்துக்கள்

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்தும்' என்ற நன்னூற் சூத்திரத்துக்குப் பழையவுரைகாரரான மயிலைநாதர் எழுதிய விசேடவுரை அடியில்வருமாறு :-

'ஆண்டு என்ற மிகையானே, தாது, எது என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற்றொடக்கத்துப் புணர்மொழிகளும் பொருள் வேறுபாடு அறிதற்பொருட்டுக் குற்றுகர குற்றிகரங்கட்குமேல் புள்ளிகொடுப்பாரும் உளரெனக் கொள்க' எனக் காண்க.

இவ் விசேடவுரையால் ஆரியமொழியான தாது இந்து முதலியன குற்றுகரமேயாயினும் உயிர்வரின் மெய்விட்டோடல் முதலிய செய்கை பெறும் இயல்புபெறாமையின் அத்தகைய ஆரிய மொழிகளின் வேறுபாடு விளங்கவும்** பொதுமொழிபுணர்மொழி

---

* சாஸனங்களில் கால்கள், என்றவாறு காணப்படும். புள்ளி வரையும்போது, சில சமயங்களில் அது கோடாக அமைவதும் கூடியதேயாம்.

** இதனால் செய்கைபெறும் குற்றுகரங்கட்குப் புள்ளியிடும் வழக்கு இவ்வுரைகாரர்காலத்தில் இல்லை என்பது பெறப்படும்.

களில் நேரும் பொருட்டு மாற்றத்தை அகற்றவும், அவற்றுக்குப் பண்டையோர் புள்ளியிட்டு வந்த செய்தி தெரியலாம். இவையன்றி, தவறாக எழுதப்பட்டவற்றை நீக்கிப் படிப்பதற்கு அறிகுறியாக அத்தவற்றெழுத்துக்களின் கீழே புள்ளிகளிட்டுக்காட்டும் வழக்கம் ஏட்டுச்சுவடிகளிற் பெரிதும் காணப்படும். இவ்வாறு காட்டுவது தொன்று தொட்ட முறையே என்பது,—'எழுத்து உருவழியாதே கிடந்தாலும், புள்ளிகுத்தினால் அத்தைக்கழித்து மேலே போமாபோலே' எனவரும் திருவாய்மொழி ஈட்டின் பந்தியாலுந் தெரியலாம். எனவே, எழுத்தின் மாத்திரையைக் குறைத்தற்குமட்டுமன்றி, அவ்வெழுத்தையே குறைத்தற்குக் குறியாகவும் புள்ளியை முன்னோர் உபயோகித்துள்ளமை புலப்படும்.

இதுவரை கூறியவற்றால், எழுத்துக்களின் வரிவடிவுகளை நன்கு விளக்காது அவை பழைய முறையே வழங்குவது என்று குறிப்பிட்டு அவற்றுட் புள்ளி பெறுவனவற்றை மட்டும் தொல்காப்பியரும்பிறரும்விதந்தோதுவது நன்குவிளங்கும். சொல்லினுகந் தொடரினுந் தெளிவான பொருளுணர்ச்சியுண்டாதற் பொருட்டு ஆசிரியர்கள் இங்ஙனம் புள்ளிவிதித்துப் போந்ததைப் பின்னோர் நெகிழவிட்டவிடங்களில், பிழைச்சொற்களும் பொருட்டிரிவுணர்ச்சியும் நிகழலாயிற்றென்றே சொல்லலாம். கன்மாப்பலகை-கனமாப் பலகை (சங்கப்பலகை) 'கள்வன்-களவன் (நண்டு,) நேர்திறம்-நோதிறம் (பண்வகை), சாகம்-சரகம் (தேனீ) முதலாகச் சொற்களின் உண்மையுருவந்தெளியப்படாமைக் கெல்லாம் இப்புள்ளியிடுவதில் நேர்ந்த சோர்வே காரணமன்றோ? இதற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. அவற்றை விரிப்பிற் பெருகும். இங்ஙனம் தமிழ்வரம்பு சிதையாமைப்பொருட்டு முன்னோர் கையாண்ட இப்புள்ளியிடுமுறை நம்மனோராற் பெரிதும் போற்றத்தக்கதாம் என்க.

மு. **இராகவையங்கார்**

(இது 1927 ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ் தொகுதி 25 பகுதி 5 —இல் வெளிவந்தது)

சீக்கியக் குருதுவாராவும் வழிபாட்டு முறைகளும்

— அ. நடராசன்

முன்னுரை

இந்துக்களுக்குக் கோவில் போல, முகம்மதியர்களுக்கு மசூதி போல, கிறித்துவர்களுக்குப் புனித ஆலயம் போல சீக்கியர்களுக்குத் 'குருதுவாரா' புண்ணியக் கோவிலாகும். பஞ்சாப் மாநிலத்தில் குருதுவாரா இல்லாத கிராமமே இல்லை எனலாம். சீக்கியர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் குருதுவாரா இருக்கும். தங்களின் சின்னமான மஞ்சள் நிறக் கொடியை அதில் பறக்க விட்டிருப்பர். அவர்களின் வழிபாட்டு முறை மிகவும் சிறப்பானது ஆகும். இக்கட்டுரை குருதுவாரா தோன்றியது முதல் அங்குச் சீக்கியர்களால் நிகழ்த்தப்பெறும் வழிபாடுகள்வரை சுருக்கமாக விளக்க முனைகிறது.

1. குருதுவாரா-ஒரு விளக்கம்

'குருதுவாரா' என்பது சீக்கியர்களின் கோவில். குருத்துவாராக்களைத் தோற்றுவிக்குமுன் தருமசாலைகள் காணப்பட்டன. பிறகு தங்களுடைய மதத் தேவைகளையும், சமுதாயத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக இக்குருதுவாராக்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதிலும் இரண்டு பிரிவுகள் உண்டு. அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலில் தர்பாராசாகிப் என்றும் ஹர்மந்தர் சாகிப் என்றும் பிரிவுகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் சீக்கிய மதகுருக்கள் மத போதனைகளுக்காக வருகை தந்த காரணத்தாலும் சில அரசியல் காரணங்களாலும் இத்தகைய குருதுவாராக்கள் சரித்திர முக்கியத்துவம் பெற்றன

2. தோற்றம்

தொடக்க காலத்தில் இவை கீர்த்தனைகள் பாடும் அறைகளாக இருந்தன. சீக்கியர்களின் முதல் குருவான குருநானக்கு

கர்தார்பூரில் 'தர்மசாலை' ஒன்று நிறுவினார். அதன் பின்னர் அவர் சென்றவிடங்களில் எல்லாம் வணங்கும் நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன என்பதற்கு ஆதாரமாகக் கீழ்க்காணும் ஆதிகிரந்தத்தின் பாடல் குறிப்பிடப்படுகிறது.

> ''குருநானக்கு கால்பட்ட இடமெல்லாம் வணங்கும்
> நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன
> உலகத்தில் எல்லா மத நிலையங்களும் குருநானக்கின்
> போதனை நிலையங்களாயின
> ஒவ்வொரு வீடும் தருமசாலை, கீர்த்தனை பாடவேண்டும்
> வைசாகித் திருவிழாவரை''[1]

என்று பாய் குருதாசு குறிப்பிடுகின்றார். எனவே குருநானக்கு சென்றவிடமெல்லாம் மத நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பது தெளிவாகிறது.

மேலும் இத்தகைய நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டமைக்கு இரு நிகழ்ச்சிகளைக் காரணம் காட்டுகின்றனர். குருநானக்கிடம் இறைவன் தோன்றி, 'வைணவர்கள் கோயில்களைப் போல, யோகிகளின் ஆசிரமம் போல, முகம்மதியர்களின் மசூதி போல உங்களைப் பின்பற்றுபவர்கள் தரும சாலையைக் கொண்டுள்ளனர்' என்று கூறியதாக மக்கள் மத்தியில் பேசிக்கொள்கிறார்கள். 'சஜன் என்பவனால் குருநானக்கிற்குக் காணிக்கையாகச் செலுத்தும் பொருட்டு 40 ஜனம் சகியில் முதல் தருமசாலா ஏற்படுத்தப்பட்டது '[2]

முகம்மதிய மன்னரின் உயர் அலுவலர் ஒருவர் குருநானக்கை அம்மாவட்டத்திலிருந்து வெளியேற்றக் குதிரையில் வந்துகொண்டு இருந்தார். அந்த ஊரில் எல்லையைத் தொட்டவுடன் குதிரை கீழே விழுந்துவிட்டது. அவனுக்குக் கண் பார்வை போய் விட்டது. வழியறியாது குழம்பிப் புலம்பிய அவனிடம் 'நீ தவறு செய்துவிட்டாய்; குருவின் அருமை உனக்குத் தெரியாது போ... அவரிடம் சென்று மன்னிப்புக் கேள்' என்று அந்த அதிகாரியைக் குருவிடம் அனுப்பி வைத்தனர். அவன் குருவின் கால்களில் விழுந்து வணங்கித் தான் செய்ய நினைத்த தவறுக்கு மன்னிக்கும்படிக் கோரினான். குருவும் அவனை மன்னிக்க அவனுக்குக் கண் பார்வை வந்தது. இதன் காரணமாக அவன் குருவுக்குக் காணிக்கையாக ஒரு பகுதி நிலங்களை வழங்கினான். முதலில் பெற

மறுத்த குருநானக்கு பின் அதனைப் பெற்றார். அங்குத் தரும சாலை நிறுவப்பட்டது.

3. வரலாற்றுக் குருதுவாராக்களில் சில...

தருமசாலைகளாக நிறுவப்பட்ட நிறுவனங்கள் குருதுவாராக்களாயின என்ற செய்தி முன்பே கூறப்பட்டது. அமிர்த சரசில் உள்ள பொற்கோவிலுக்கு அன்றும் இன்றும் சீக்கிய மக்களிடையே உயர்ந்த இடமுண்டு. காரணம் அதுதான் சீக்கியர்களின் புண்ணியத்தலம் ஆகும். இதனுடன் சீக்கியக் குருக்களான குரு இராம்தாஸ், குரு அர்சுன்சிங் ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு. தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் பொற்கோவிலுக்குள் சென்று வணங்க வேண்டும் என்பது சீக்கியர்களின் முதன்மையான ஒன்றாகும்.

மராட்டிய மாநிலத்தில் நந்தேடு என்னுமிடத்திலுள்ள 'தகத்ஸ்ரீ ஹசூர் சாகிப்' குருதுவாராவும், அமிர்தசரசில் உள்ள ஸ்ரீஅகால்தகத் சாகப் குருதுவாராவும், பீகார் மாநிலத்தில் உள்ள பாட்னா நகரில் உள்ள 'தகத் ஸ்ரீபாட்னாசாகிப்' குருதுவாராவும், அனந்தப்பூர் சாகிபில் உள்ள 'தகத்ஸ்ரீ கேஸ்கர் சாகிப்' குருதுவாராவும் சீக்கிய மதத்தினரால் போற்றப்பட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க மிக முக்கியமான குருதுவாராக்களாகும். குருநானக்கு பிறந்த இடத்தில் உள்ள 'நங்கானாசாகிப்' குருதுவாராவும் வரலாற்றுப் புகழ் பெற்றது. இங்குக் குருநானக்கு பிறந்ததினம் சிறப்பாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது. இது இப்பொழுது பாகித்தானில் உள்ளது.

அனந்தப்பூர் சாகிப் என்ற இடத்தில் உள்ள குருதுவாராவுக்கும் சீக்கியர்களின் கடைசிக் குருவான குருகோவிந்த்சிங்குக்கும் தொடர்புண்டு. இங்கிருந்துதான் குருகோவிந்த் முகம்மதிய மன்னர்களை எதிர்த்து யானைமீது அமர்ந்து போர் புரிந்தார் எனச் சீக்கிய வரலாறும், பஞ்சாப் வரலாறும் தெளிவுறுத்துகின்றன. மேலும் இவர் இங்கிருந்துதான் 'கால்சா'[3]வைத் தோற்றுவித்தார். அந்தக் 'கால்சா' நிறுவனம்தான் இன்றுவரை பஞ்சாப்பில் சீக்கியர்களால் பெரியதென மதித்துப் பாராட்டப் பெறும் உண்மையான, தூய்மையான நிறுவனம் ஆகும்.

தில்லியில் உள்ள 'சிஸ்கன்ஜ்' குருதுவாரா சீக்கியக் குருவான குருதேக்பகதூருடன் தொடர்புடையது. 'டல்கனோடு'

என்ற கிராமத்திலுள்ள குருதுவாராவில் தில்லி செல்லும் வழியில் தங்கியதால், இதற்கும் சரித்திர முக்கியத்துவம் உண்டு.

குருகர்கோபிந்துக்குப் பிறகுதான் இவை அதிகமானது என்று கூறலாம். அவர் போதனைகளுக்கும், பிரார்த்தனைகளுக்கும் அதிகமாக ஏற்பாடு செய்து வந்தார்.

மேலும் முகம்மதியர்களுடன் போர் நடந்த இடங்களில் தோன்றியுள்ள குருதுவாராக்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

4. குருதுவாராவைச் சுற்றி...

இப்பொழுது வரலாற்றுச் சிறப்புமிக்க குருதுவாராக்கள் இந்தியாவிலும் பாகித்தானத்திலும் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை வெள்ளைக் கற்களைக் கொண்டே கட்டப்படுகின்றன. எல்லாக் குருதுவாராக்களிலும் மஞ்சள் நிறக்கொடி பறக்கும்.

சிறிய வழிபடும் நிலையமாகத் தொடங்கப்பட்ட குருதுவாராக்களின் மூலம் இப்பொழுது பல சமுதாய முன்னேற்றத்துக்கான மக்களுக்குப் பயன்படுகின்றவகையில் பல அமைப்புக்களை உருவாக்கியுள்ளனர். பெரும்பாலும் குருதுவாராவோடு இணைத்து மருத்துவமனைகள் காணப்படுகின்றன. வெளியூர்களில் இருந்து வரும் பயணிகள் தங்கிக் கொள்வதற்கேற்பத் தங்கும் வசதி கொண்ட அறைகள் உள்ளன. இதிலிருந்து வருகின்ற வருமானத்தின் மூலம் பள்ளிகள் நிறுவியுள்ளனர். அனந்தப்பூர் சாகிபில் உள்ள கால்சா நிறுவனத்தின் மூலமாகச் சில கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

கோவிலின் உட்பகுதியின் மையத்தின் சிறிய திட்டில் சீக்கியர்களின் ஆதிகிரந்தம் வைக்கப்பட்டிருக்கும். அதன் அருகில் ஒரு பூசாரி அமர்ந்து கிரந்தம் படிப்பார். சுவர்களில் சீக்கிய குருக்களின் படங்கள் மாட்டப்பட்டு இருக்கின்றன. சீக்கிய மக்களின் வீரச்செயல்களுக்கான படங்களும் முகம்மதிய மன்னர்களை எதிர்த்து அவர்கள் போராடிய போர்ப் படங்களும் காணப்படுகின்றன. சுவர்களில் சீக்கிய குருக்களின் போதனைகள் எழுதப்பட்டுள்ளமை தெரிகிறது. எல்லாக் குருதுவாராக்களிலும் இப்பொழுது ஒலிபெருக்கிக் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு இலவசமாக உணவு தயாரித்து வழங்கும் இடம் உள்ளது. இதற்கு 'லங்கர்' என்பதுபெயர். யார் குருதுவாராவிற்கு வந்தாலும் முதலில் லங்கர் அருந்திவிட்டுப் பின் வணங்கச் செல்ல வேண்டும் என்பது குருநானக்கின் விருப்பம். முக்கிய பெரிய குருதுவாராக்களில் சீக்கியர்களின் வரலாற்றைத் தெளிவாக்கும் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

5. குருதுவாராவின் சிறப்பு

குருநானக்கைச் சந்திக்க வருகை தந்த முகலாய மன்னர் அக்பரை முதலில் லங்கர் அருந்திவிட்டுத் தன்னைச் சந்திக்கக் குரு பணித்ததாகவும், அக்பர் லங்கர் அருந்தியபின் நானக்கைச் சந்தித்தார் என்றும் ஒரு செய்தி ஆதிகிரந்தத்தில் காணப்படுகிறது.

குருதுவாராவின் சிறப்பைக் கூறும் வகையில் ஒரு கதை கூறப்படுகிறது. ஒரு மன்னர் இருந்தார். அவர் சிறப்புற ஆட்சி நடத்தினார். ஆனால் அவருக்குக் குழந்தை இல்லை. அதனால் மன்னரும் அரசியும் மிகவும் வருந்தினார்கள். ஒருநாள் அரசி மன்னரிடம் நமக்குக் குழந்தை வேண்டி நாம் ஏன் குருவின் முன் வேண்டக்கூடாது? என வினவினாள். மகிழ்வோடு ஒப்புக் கொண்ட மன்னர் தன் மனைவியுடன் குருதுவாராவிற்கு வருகை தந்தார். மனத்தை ஒருநிலைப்படுத்திக் குருவை நினைத்துக் குழந்தைக்காக வேண்டினார். அதன்பின் அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. இது குருவின் மகிமையாலும், குருதுவாராவின் சிறப்பாலும் ஏற்பட்டது என்கின்றனர். குருதுவாராவிற்குள் சென்று மனதார இறைவனை நினைத்து வேண்டினால், வேண்டுதல் பலிக்கும் என்பது சீக்கியர்களின் நம்பிக்கை. குரு கிரந்தமும் குருதுவாராவும்தான் சீக்கியர்களின் ஒவ்வொருவர் வாழ்விலும் வழிகாட்டிகள் என்ற நம்பிக்கையுடன் வணங்குகின்றனர்.

6. வழிபடும் முறைகள்

சீக்கியக் குருதுவாராக்களில் அதிகாலை முதல் வழிபடும் மக்கள் வருகை புரிவதைக் காணலாம். காலை 4 மணிமுதல் 6மணிவரை வழிபடும் நிகழ்ச்சிக்கு 'ஆசாதிவார்'[4] என்பதுபெயர். மாலை 6 மணியிலிருந்து வணங்கும் முறைக்கு 'ஆர்த்தி'[5] என்பது பெயர். காலை, மாலை இருவேளைகளிலுமே சீக்கிய மதத்தைச் சேர்ந்த மக்கள் குருதுவாரா சென்று வழிபடுவது வழக்கம். காலை

யில் செல்வதைவிட மாலையில் செல்வதை பல பேர் விரும்பு கின்றனர். குறிப்பாக அலுவலகங்களிலும் பிற வெளியிடங்களிலும் அலுவல் புரியும் மக்கள் மாலையில் செல்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். பிற மக்களும், பெரும்பாலும் பெண்களும் காலையில் வழிபடுவதில் அக்கறை காட்டுகின்றனர்.

காலை எழுந்தவுடன் குளித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பது விதியாக உள்ளது. மற்ற நேரங்களில் செல்லும் மக்கள் கால்களைக் கழுவி விட்டுச் செல்கின்றனர். எந்த நேரமானாலும் குருதுவாராவின் படிக்கட்டில் காலை எடுத்து வைக்கும் முன் பாகக் கால்களைக் கழுவிக் கொள்ள வேண்டும் என்பது பழக்க மாக இருக்கிறது இதன் காரணமாகவே குருதுவாராவின் முன் புறம் குழாயிலோ தொட்டியிலோ தண்ணீர் நிரப்பி வைக் கின்றனர். அமிர்தசர், பட்டியாலா, அனந்த்பூர் போன்ற பெரிய ஊர்களில் உள்ள குருதுவாராக்களில் வாயிலில் உள்ள முதல் படிக்கட்டுக்குக்கீழ்ச் சிறு பள்ளம் ஏற்படுத்தி அதில் தண்ணீர் இருக்குமாறு வைத்துள்ளனர். அதற்கருகில் குழாயில் இருந்து தண்ணீர் அப்பள்ளத்தில் ஒருபுறம் விழுந்து கொண்டு இருக்கும். மறுபுறம் வெறியேறிக்கொண்டு இருக்கும். வணங்கச் செல்லும் மக்கள் தண்ணீரைக் கொண்டு முகம், கை, கால்களைச் சுத்தம் செய்கின்றனர்.

படிக்கட்டில் காலெடுத்து வைக்கும் முன்பாகவே தங்களு டைய தலையை மூடவேண்டும் என்பது மரபு. பெண்கள் தங்கள் கழுத்தில் அணிந்துள்ள 'துப்பட்டா' என்ற துணியை எடுத்துத் தலையில் இட்டுக்கொள்கின்றனர். சீக்கிய ஆண்களுக்கு அது அவசியமில்லை காரணம் அவர்கள் ஏற்கெனவே தலைப் பாகையிட்டுள்ளனரே? மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் செல்ல வேண்டும் என்றால் தலையில் கைக்குட்டையாலோ, துண்டாலோ மறைத்தல் வேண்டும். புதிதாகச் செல்பவர்களின் வசதி கருதித் தேவைப்படுகின்றவர்களுக்குக் குருதுவாராவின் சார்பாகவே முகப்பில் சிறிய துண்டு வழங்குகின்றனர். காலணி களை வெளியே கழற்றி வைத்துவிட்டுச் செல்லல் வேண்டும். எந்த மதத்தினர் வேண்டுமானாலும் உள்ளே சென்று வணங்க லாம்.

படிக்கட்டில் ஏறும்பொழுது ஒவ்வொரு படிக்கட்டையும் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கின்றனர். குருதுவாராவினுள்

ஆதிகிரந்தம் வைக்கப்பட்டிருக்கும். ஆதிகிரந்த்தின் முன்னால் சென்று மண்டியிட்டு வணங்குகின்றனர். தங்களால் இயன்ற காணிக்கையைக் கிரந்தத்துக்கு முன் விரிக்கப்பட்டுள்ள துணியில் போட்டு வணங்குகின்றனர். வணங்கிவிட்டுக் கிரந்தத்தின் எதிரில் அமர்ந்து இறைவனை நினைத்து, கிரந்த வரிகளைச் சொல்வதைக் காணலாம். ஆதிகிரந்தம் இருக்கும் இடத்தின் முன்பாகத் தரை விரிப்பு விரிக்கப்பட்டு இருக்கும். சிறிய குருதுவாராக்களில் அது இல்லாமலும் இருக்கும்.

6. இசைக்கருவிகளோடு கீர்த்தனை

இசைக் கருவிகளுடன் இசைத்துப் பாடக்கூடிய கலைஞர்கள் பெரிய குருதுவாராக்களில் உள்ளனர். அவர்கள் கீர்த்தனை பாடுவர். அது ஒலி பெருக்கியின் மூலம் ஒளிபரப்பப்படும். அவர்கள் ஆதிகிரந்தத்தில் காணப்படும் 'ரஹிராஸ்' என்ற இசையைப் பாடுகின்றனர். 'குர்பானி' பாடப்பெறும். குர்பானி என்பது மதத்தைப் பின்பற்றுபவர்களுக்காகக் குருவினால் அளிக்கப்பட்ட போதனைகளாகும். கிராமங்களிலும் ஒலிபெருக்கியின் மூலம் இச்செய்தி ஒலி பரப்பப்படுகின்றது.

''இசையும் பாடல்களும் வரவேற்கப்படுகின்றன
ஆவற்றின்மூலம் மனம் இறைவனை நோக்கி ஒருமுகமடையும்''
— AG 849

என்று சீக்கியர்களின் மூன்றாவது குரு குறிப்பிடுகிறார். எனவே இசையுடன் கூடிய கீர்த்தனை பாடுவதில் பெரிதும் அக்கறை காட்டுகின்றனர். இந்தக் கீர்த்தனையில் கதைகள் கூறப்படுகின்றன. சிக்கியக் குருக்களின், சிக்கிய மக்களின் வீரச் செயல்களையும், நல்ல செயல்களையும் அவர்களின் சேவைகளையும் குறிப்பிடுகின்றனர், குருதுவாராவில் 'கராபிரசாத்'[8] வழங்கப்படும்.

குரு கிரந்தத்தை வணங்கிவிட்டு அதை ஒருமுறையோ மூன்று முறையோ சுற்றி வணங்கிவிட்டுச் செல்லும் பழக்கம் காணப்படுகிறது. குருதுவாராவைவிட்டு வெளியில் செல்லும் பொழுதும் படிக்கட்டுகளை ஒவ்வொன்றாகத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர்.

முடிப்பரை

சீக்கிய மதத்தினர் குருதுவாராக்களுக்கும், குருகிரந்தத்துக்கும் அவைகளை வழிபடும் முறைகளுக்கும் அளிக்கும் முக்கியத்

துவம் தெளிவாகத் தெரிகிறது. தங்களுடைய மதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். மனிதனைத் தெய்வமாகவும், மனித வாக்கைத் தெய்வ வாக்காகவும் வைத்து வணங்கும் இவர்களுடைய முறை பிற மதங்களின் முறைகளிலிருந்து வேறுபடுவதைக் காணலாம். குருதுவாராக்களைப் பற்றியும் அங்கே வழிபடும் முறைகள் பற்றியும் இக்கட்டுரை சுருக்கமாகத் தந்துள்ளது. இந்த வழிபாட்டு முறைகளையும் தமிழர்களின் வழிபாட்டு முறைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் பல ஒற்றுமைகளைக் காணமுடியும்.

அடிக்குறிப்புக்கள்

1. Guru Granth sahib Var I pouri, 27

2. Sikh History, p. 62

3. 'கால்சா' — குருகோபிந்த் சிங்கால் தொடங்கப்பட்ட சகோதரத்துவத்தை விளக்கும் நிறுவனம்

4. ஆசாதிவார் — சீக்கிய குருதுவாராக்களில் வழிபடும் காலை வழிபாடு

5. ஆர்த்தி — சீக்கியக் குருதுவாராக்களில் வழிபடும் மாலை வழிபாடு

6. ரஹிராஸ் — குருகிரந்தத்தின் ஒரு பகுதி. குருதுவாராக்களில் வழிபடும் பொழுது பாடப்படுவது

7. குர்பானி —குருவின் போதனைகள்.

8. கராபிரசாத் —சீக்கியக் குருதுவாராக்களில் வழிபாட்டுக்குப் பின் வழங்கப்படும் பிரசாதம்.

இலக்கணக் கொத்து

— டாக்டர் செ. சுயம்பு

சுவாமிநாததேசிகர்

இந்நூல் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமி நாத தேசிகரால் இயற்றப்பட்டது. தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தின் திருநெல்வேலிக் கிளையாகிய ஈசான மடத்தின் தலைவராகப் பணியாற்றியதால், ஈசான தேசிகர் எனும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். தமிழிலும் வடமொழியிலும் தேர்ந்த புலமை பெற்றவர்.

நூலமைப்பு

இலக்கணக் கொத்து சூத்திரம், உரைச் சூத்திரம், உரை, உதாரணச் சூத்திரம்[1] எனும் நான்கும் உடையது. நூலாசிரியரே இந்நான்கனையும் இயற்றியுள்ளார். நூலாசிரியரே தம் நூற்கு உரை எழுதுதல் என்பதற்கு வைத்திய நாத தேசிகரும் சுப்பிர மணிய தீட்சிதரும் முன்னோடியாவர் என்பதனை இந்நூலா சிரியர் உரைச்சூத்திரம் ஒன்றில் (7) தெரிவிக்கின்றார்.

> நூல்செய் தவனந் நூற்குரை யெழுதன்—முறையோ வெனிலே
> யறையக் கேணீ—முன்பின் பலரே யென்கண் காணத்—
> திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்—றமிழ்க்கிலக் காகிய
> வயித்திய
> நாத—னிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதின—னன்றியுந்
> தென்றிசை யாழ்வார் திருநக—ரப்பதி வாழுஞ் சுப்பிரமணிய—
> வேதியன் றமிழ்ப்பிர யோக விவேக—முரைத்துரை யெழுதின
> னொன்றே பலவே.

இந்நூல் மேற் சுட்டப்பட்ட நால்வித அமைப்பில் மட்டு மன்றி, கருத்துக்களிலும் பிரயோக விவேகத்தைப் பெரிதும் பின் பற்றுகின்றது. கருத்துக்கள் பெரும்பான்மையும் பிரயோக விவே கத்தில் காணப்படுவனவாகும். பிரயோக விவேகத்தில் வட

மொழிக் கருத்துக்கள் வடசொற்களாகவே காணப்பட, இந்நூலில் அச்சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன.[2]

இலக்கணக் கொத்து வேற்றுமையியல், வினையியல், ஒழிபியல் எனும் மூன்று இயல்களை உடையது. இவை முறையே 52, 22, 45 நூற்பாக்களை உடையன.

இந்நூல் வேற்றுமை, சிலவகை வினைச்சொற்கள் ஆகிய சொல்லிலக்கணத்தை மட்டும் விரித்துரைக்கின்றது.[3] அச் செய்திகளும் பல்வேறு இலக்கணிகளின் கருத்துத் தொகுப்பாகவும் வடமொழிக் கருத்துக்களைப் புகுத்துதலாகவும் உள்ளன.

நூலின் நோக்கம்

சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து எனும் பெயர்க் காரணம், நூல் எழுந்த நோக்கம், அணுகுமுறை ஆகியவற்றைத் தெளிவாகப் பாயிரத்தில் சுட்டுகின்றார்.

> பலர் நூல்களினும் பலருரைகளினுஞ் சிதறிக் கிடந்த
> சில விதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கே
> யறியக் கிடத்தலின், இலக்கணக் கொத்தென்று காரண
> பெயர் பெற்றதென்க (உரை 5)

தொல்காப்பியம், நன்னூல் போன்ற முந்தை நூற்களில் விரித்துரைக்கட்ட செய்திகளை விடுத்து, அவற்றில் காணப் படாத செய்திகள் இங்குக் கூறப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட இலக்கணக் கூறு குறித்த பல்வேறு அறிஞர் களின் கருத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அறிஞர்களின் பெயரைச் சுட்டுதலின்றித் தொகுத்துரைக்கப்படுகின்றன. அக் கருத்துக்கள் சுருக்கம் கருதி ஆராயப்படவில்லை என்பது நூலா சிரியரின் கூற்று.[4]

தமிழ், வடமொழி எனும் இரு மொழிகட்கும் ஒத்த இலக் கணமே உண்டு என்பது இந்நூலின் திடமான நம்பிக்கையாகும்.

> வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினு
> மிலக்கண மொன்றே யென்றே யெண்ணுக (பாயிரம்)

இந்நம்பிக்கையை உறுதிப்படுத்தும் நோக்கம் நூல் முழு வதும் வெளிப்படையாகக் காணப்படுகிறது. வேற்றுமையியல்

செய்திகள் பெரும்பான்மையும் வடமொழி இலக்கணத்தைத் தமிழ் இலக்கணத்தோடு பொருத்தி, ஒன்றெனக் காட்டுவதில் முனை வனவாகும்.

வடமொழிச் செய்திகள் தமிழாக்கி இந்நூலில் தரப்பட்டுள்ளமையை வெளிப்படக் கூறும் நூலாசிரியர், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூற்களிலும் இம்மொழியாக்கம் நிகழ்ந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றார். இத்தகைய இயல்பு தமிழுக்குப் புதியதன்று என்பது தேசிகரின் கருத்தாகும்.

தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்
வடமொழி நியாயம் வந்தன... ...
....
வன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ (பாயிரம்)

இரு மொழிகளிலும் இலக்கண, இலக்கியச் செய்திகள் பல ஒத்துக் காணப்படுதல் தேசிகரை இவ்வாறு கடுமையாகப் பேசத்தூண்டியுள்ளது.

இந்நூலில் சுருங்கக் கூறப்பட்டவை நன்னூல் முதலிய வற்றில் விரிவாகக் காணப்படுதலால், அவற்றில் காணுமாறு நெறிப்படுத்தும் இயல்பும் கருத்துக்கள் பிறருடையன என்பதைச் சுட்டிச் செல்லுதலும் உரையில் பரவலாகக் காணப்படுகின்றன[5].

வேற்றுமையியல்

வேற்றுமைகளின் இயல்பு, அவற்றின் மயக்கம் ஆகிய செய்திகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

வகைகள்

வேற்றுமை எட்டு வகைப்படும் என்பது வடமொழியறிஞர் துணிவு. ஆனால் தமிழில் ஆறு, ஏழு, எட்டு எனும் மூவிதக் கொள்கைகள் நிலவுகின்றன (13)

தொல்காப்பியக் காலத்தில் வேற்றுமை ஏழு வகைப்படும் எனும் கருத்து நிலவியது. எனினும் தொல்காப்பியம் எட்டு வகை என்ற கொள்கையினை வலியுறுத்துகிறது.

வேற்றுமை தாமே ஏழென மொழிப (2:2:1)
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே (2:2:2)

ஏழுவகை என்பார் விளியை ஒரு வேற்றுமையாகக் கருதாமையைத் தொல்காப்பிய நூற்பாவழி அறியலாம். நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற தமிழ்நூற்கள் யாவும் எட்டுவகை என்பதையே உடன்படுகின்றன.

எழுவாய், விளி தவிர்ந்த ஆறு வேற்றுமைகட்கும் உருபு உண்டு என்று கருதிய அறிஞர்கள் வேற்றுமை ஆறுவகைப்படும் எனுங் கருத்தினைத் தெரிவித்திருக்கலாம்.

இலக்கணக் கொத்து (14) பொருளின் அடிப்படையில் வினைமுதல் அல்லது எழுவாய், விளி, செயப்படுபொருள், கருவி, கொள்வோன், நீக்கம், குறை, இடம் என்று வேற்றுமைகளைச் சுட்டுகின்றது. இவ்வெட்டனுள் விளி, குறை (ஆறாம் வேற்றுமை) தவிர்ந்த ஆறும் வினைச் சொல் ஏற்று முடியக் கூடியன. இதனால் இவை கார்கம் என்று சொல்லப்படும்.

ஒரு வேற்றுமைப் பொருளை உணர்த்த உருபு, வேறுருபு, சொல்லுருபு எனும் மூவகை உருபுகள் வழங்குதலை இந்நூல் (16) சுட்டுகின்றது. இவற்றுள் வேற்றுமைப் பொருளுக்கு உரிமையுடையது என்று மரபு வழிக் கருதப்படுவன உருபாகும். ஒரு வேற்றுமைக்கு உரிமையுடையது பிற வேற்றுமைப் பொருளை உணர்த்தவரின் வேறுருபு எனப்படும். இதனை ஏனை நூற்கள் வேற்றுமை மயக்கம் என்று சுட்டுகின்றன. குறியீடு எனும் நிலையிலுள்ள உருபு போலன்றி, வினையடியாகப் பிறந்த சொற்கள் வேற்றுமைப் பொருளை உணர்த்துமாயின் அவை சொல்லுருபுகளாகும்.

1. உருபு — வாளால் வெட்டினான்
2. வேறுருபு — வாளின் வெட்டினான்
3. சொல்லுருபு — வாள்கொண்டு வெட்டினான்

எழுவாய்

எழுவாய் வேற்றுமை உருபு குறித்த சான்றோர்களின் எண் வகைக் கொள்கைகளைச் சுவாமிநாத தேசிகர் (25) தொகுத்துக் கூறுகின்றார். அவை 1. எழுவாய்க்கு உருபு இல்லை. 2 பெயர்ச் சொல்லே உருபு 3. பயனிலை கொள்ளும் தன்மையே உருபு 4. பயனிலை எழுவாயைக் கொள்ளும் தன்மையே உருபு 5. வினை முதலாக நிற்கும் தகுதியே உருபு 6. எழுவாயாக வருங்கால

பெயர்களில் ஏற்படும் விகாரமே உருபு 7. பெயர்ச் சொல்லின் பின்வரும் விகுதியே உருபு 8. ஆயவன், ஆனவன், ஆவான், ஆகின்றவன் போன்ற ஐம்பாற் சொற்கள் பெயர்ப்பின் வருதலே உருபு என்பனவாகும்.

தமிழில் எழுவாய்க்கு உருபு இல்லை; உண்டு எனும் கருத்து வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்ததாகும் என்ற துணிபு தம் காலத்து நிலவியதைத் தேசிகர் உரையில் சுட்டுகின்றார். இக் கால மொழியியல் அறிஞர் பலர் உருபு இல்லை எனுங் கொள்கையினரே.

பெயர்ச் சொல்லே உருபு எனுங் கொள்கை தொல்காப்பியத் தில் காணப்படுதலைத் தெய்வச் சிலையார் உரை (2:2:3) வெளிப்படுத்துகின்றது. நூற்பாவின் அமைப்பில் இக்கருத்து இழையோடாமல் இல்லை. அவ்வாறாயின், விளி ஏற்குங்கால் பெயர்கள் எய்தும் திரிபே விளிவேற்றுமையின் உருபாகும் எனும் பிற்கால நூற்களின் கருத்துத் தொல்காப்பியத்துக்கும் உடன் பாடானதே.

எழுவாய்க்கு உருபு உண்டு என்பது நன்னூலில் வெளிப் படையாகக் காணப்படுகிறது. ஒருவன் ஒருத்தி... இரு நான்கு உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே' (240) என்பதும் 'எழு வாய் உருபு திரிபில் பெயரே' (295) என்பதும் இக்கொள்கைக் குச் சான்றுகளாகும். இலக்கண விளக்கம் முதலிய பிற்கால நூற்களும் இக்கருத்துடையனவே.

யான், நீ, தான், யாம், நீயிர், தாம் எனும் மூவிடப்பெயர் கள் வேற்றுமை உருபு ஏற்குங்கால் முறையே என், நின், தன், எம், நும், தம் என்று திரிகின்றன. இச்சொற்கள் எழுவாயில் திரிதலில்லை. ஆனால் சில இலக்கண நூற்கள் என், நின், நும் போன்ற சொற்களே இயல்பானவை என்றும் அவை எழுவாயாக வருங்கால் யான், நீ, நீயிர் எனத் திரிகின்றன என்றும் கருது கின்றன.[7] இக்கருத்து ஆறாவது கொள்கையாகும்.

ஏழு, எட்டாவது கொள்கைகள் வீரசோழியத்தில் (30) இடம் பெற்றுள்ளன.

வினை முதல் (எழுவாய்) ஏழு நிலைகளில் அமையும்(26). அவை வருமாறு:

1. செயப்படுபொருள் வினை முதலாகிச் செயப்படுபொருள் குன்றிய வினை ஏற்பது — இன்னா தாமே வரும்
2. செயப்படுபொருள் வினைமுதலாகிச் செயப்படுபொருள் குன்றாத வினை ஏற்பது — திண்ணை மெழுகிற்று
3. ஏது வினை முதல் — காற்றுப் பழமுதிர்த்தது
4. தன்வச வினை முதல் — சாத்தன் உண்டான்
5. தெரியாநிலை வினை முதல் — மாடம் செய்யப்பட்டது
6. தடுமாற்ற வினைமுதல் — ஒத்த கிழவனும் கிழத்தியும்காண்ப
7. தொழிற்பெயர் வினை முதல் — கொல்லாமை அறவினை எல்லாம் தரும்

ஒத்தகிழவன் கிழத்தியைக் காண்ப; ஒத்த கிழத்தி கிழவனைக் காண்ப என்று வினைமுதலும் செயப்படுபொருளும் தடுமாறுதலால் தடுமாற்ற வினைமுதல் ஆனது. இவ்வேழனுள் தெரியாநிலை தவிர்ந்த ஆறும் தெரிநிலை எனப்படும்.

விளி

விளி வேற்றுமையை இலக்கணக் கொத்து (30) இன்றியமையாததாகக் கருதவில்லை.

அழைத்தலென் றொன்றன் றிவேறின் மையின்
விளிக்குச் சூத்திரம் விளம்பில மென்க

செயப்படுபொருள்

செயப்படுபொருள் கருத்துண்டாதல் கருத்தின்றாதல், இருமையும் ஆதல் (கருத்து உண்மையும் இன்மையுமாகிய இரண்டுமாதல்), ஈருருபு இணைதல், கருத்தாவாதல், அகநிலையாதல், தெரிநிலை எனும் ஏழு வகையாக அமையும். மேலும் இயற்றப்படுதல், எய்தப்படுதல், வேறுபடுக்கப்படுதல் முதலியனவாக ஒரு சாரார்[8] வகைப்படுத்துதலும் இவற்றுள் அடங்கும்(31).

1. கருத்து உண்டாதல்
(கருத்து உள்வழிச் செயப்படுபொருள்) — சோற்றை உண்டான்
2. கருத்து இன்றாதல்
(கருத்து இல்லாத வழிச் செயப்படுபொருள்) — சோற்றைக் குழைத்தான்

3. இருமையும் ஆதல் — கத்தரிக்காயையும் புழுவையும் கறித்தான். (கத்தரிக்காயைக் கறிக்கும் கருத்து உண்டு; ஆனால் புழுவைக் கருத்தின்றியே (தற்செயலாகக்) கறித்தான்.

4. ஈருருபு இணைதல் — யானையைக் கோட்டைக் குறைத்தான்

5. கருத்தாவாதல் — தன்னைப் பேணினான்
(கருத்தாவே செயப்படுபொருளாகவும் வந்திற்று)

6. அகநிலையாதல் — வருதலைச் செய்தான்
(வந்தான் எனும் புறவடிவம் வருதலைச் செய்தான் என அகவடிவில் அமைதலுண்டு)

7. தெரிநிலை — மாடம் செய்யப்பட்டது

மாடம் வினைமுதலாகச் செயற்பட்ட போதிலும், அது செயப்படு பொருளே எனும் கருத்து வெளிப்படத் தெரிய அமைந்துள்ளது. தெரிநிலை தவிர்ந்த ஆறும் தெரியாநிலைச் செப்படு பொருளாகும்.[9]

கருவி

இவ்வேற்றுமை அக்கருவி, புறக்கருவி, ஒற்றுமைக் கருவி என மூவகைப்படும், (21). முதல், துணை, ஞாபகம், காரகம், ஏது, வினை, நிமித்தம், வேற்றுமை, வினைமுதல், காலம் முதலிய பிரிவுகளை இம்மூன்றனுள் அடக்குவர் (22).

அகக்கருவி	—	மனத்தானினைந்தான்
புறக்கருவி	—	வாளால் வெட்டினான்
ஒற்றுமைக்கருவி	—	அறிவானறிந்தான்

கொள்வோன்

கொள்வோன் வேற்றுமையைக் கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், ஏலாது ஏற்றல், ஈவோன் ஏற்றல், உயர்ந்தோன் ஏற்றல், இழிந்தோன் ஏற்றல், ஒப்போன் ஏற்றல், உணர்வின் ஏற்றல், விருப்பாயேற்றல், வெறுப்பாயேற்றல் முதலியனவாக வகைப்படுத்துவர்.[10] இவை தவிர, வழக்கு, உரிமை, அச்சம், பாவனை என்பவற்றின் அடிப்படையிலும் இவ்வேற்றுமை வருதலை ஆசிரியர் உரையில் சுட்டுகின்றார் (36). இவ்வகைப்பாடு கொள்வோனின் தருதி, மனநிலை ஆகியவற்றின் அடிப்படையிலானது.

வழக்கு	—	மருகனுக்கு மகட் கொடுத்தான்
உரிமை	—	மகனுக்கு அரசு கொடுத்தான்
அச்சம்	—	அரசற்குத் திறை கொடுத்தான்
பாவனை	—	தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான்

நீக்கம்

நீக்க வேற்றுமை நிலைத்திணை, இயங்குதிணை[11], பண்பு எனும் மூவகையாகத் தோன்றும் (38).

நிலைத்திணை நீக்கம்	—	மலையின் இழிந்தான்
இயங்குதிணை நீக்கம்	—	யானையின் இழிந்தான்
பண்பு நீக்கம்	—	சிறுமையின் நீங்கிய

குறை

ஒற்றுமை, வேற்றுமை எனக் குறை இரு வகைப்படும். ஒற்றுமையில் உட்பருப்பு இல்லை. ஆனால் வேற்றுமை ஒன்றாய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறாய்த் தோன்றல் என மூவகைப்படும். அவற்றுள் ஒன்றாய்த் தோன்றலில் ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம், சினை, குணம், தொழில் எனும் ஆறு பிரிவுகள் உள்ளன. உரிமையாய்த் தோன்றலில் பொருள், இடம், காலம், இரு வகை நூற்கள் (ஒருவர் எழுதிய நூல் — சம்பந்தனது தமிழ், ஒருவர் குறித்து எழுதப்பட்ட நூல்— சம்பந்தனது பிள்ளைத் தமிழ்) எனும் ஐந்து பிரிவுகள் உள்ளன [12]. வேறாய்த் தோன்றல் என்பது ஒரு பொழுது ஒருவர்க்கு உரிமையாயும் மற்றொரு கால் பிறர்க்கு உரிமையாயும் வருதற்குரியது. இதனால் வேறாய்த் தோன்றல் நிலைமையில் உடைமை என்றும் கூறப்படும்.

ஒற்றுமைக்குறை — என்னுயிர், இராகுத்தலை

வேறாய்த் தோன்றற்குறை — சாத்தனது பசு, சாத்தனது பொன். ஒன்றாய்த் தோன்றலையும் உரிமையாய்த் தோன்றலையும் நன்னூல் முதலியன முறையே தற்கிழமை, பிறிதின்கிழமை எனச் சுட்டுகின்றன.

இடம்

உரிமை யிருவகை யோரிட மெங்கு
மெனநான் கென்றே யியம்புவ ரிடனே (42)

இந்நூற்பா தற்கிழமை, பிறிதின் கிழமை எனும் இருவகை உரிமைகளோடு, ஓரிடத்தில் தங்குதல், எங்கும் தங்குதல் என்பனவுமாக இடம் நால்வகைப்படுதலைக் கூறுகிறது.[13]

தற்கிழமை இடம் — கையின்கண் விரல்
பிறிதின் கிழமை இடம் — காட்டின் கண் புலி
ஓரிடத்தில் தங்குதல் — ஊர்க்கண் இருந்தான்
எங்கும் தங்குதல் — மணியின்கண் ஒளி

இன்னும், நிகழ்த்தடும் இடம், இடமல்லா இடம் எனவும் இடம் வகைப்படுத்தப்படுதலும் உண்டு. காலம், திக்கு, ஆகாயம், வெயில், இருள், நிலம் என்பன நிகழ்த்தப்படும் இடமாகும். கூட்டிப் பிரித்தல், பிரித்துக் கூட்டல், இருவரின் முடியும் ஒரு வினைத் தொழிற்பெயர் என்பன இடமல்லா இடமாகும்.

கூட்டிப்பிரித்தல் — அவற்றுள், அஇஉ எஒக் குறில்
பிரித்துக் கூட்டல் —வானுறையுந், தெய்வத்துள் வைக்கப் படும்
இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயர் } தட்டுப்புடைக்கண் வந்தான் (தட்டுப்புடை=இருவர் போரிடும் நேரம்)

இலக்கணக் கொத்து வேற்றுமை மயக்கக் கருத்துக்களை 21 நூற்பாக்களில் தொகுத்துரைக்கின்றது. இவை தொல்காப்பியம் முதலியவற்றில் கூறப்படுவனவாகும்.

வினையியல்

வினைச் சொற்கள் பெயர், வினை, இடை, உரி எனும் நான்கன் அடியாகப் பிறக்கும் என்பர் ஒருசாரார். மற்றொரு சாரார் பண்படியாகப் பிறக்கும் என்பர். ஆயினும், பெயர் முதலிய நான்கனுள்ளும் பண்பு அடங்கும் என்று சுவாமி நாத தேசிகர் (68) கூறுகிறார்.

பெயரடி வினை — ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினையடி வினை — நடந்தான்
இடையடி வினை — புலிபோன்றான்
உரியடி வினை — கண் சிவந்தது

தனிவினையும் தொடர்வினையும்

வினைச் சொற்கள் தனிவினை, தொடர்வினை என்று இரு வகைப்படும். தனிவினையில் முதனிலை (பகுதி) மட்டுமே

அமையும். தொடர் வினையில் முதனிலையோடு விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஐந்தனுள் ஒன்றோ பலவோ சேர்ந்து அமையும். இவ்விரு வகை வினைகளும் தொழிற்பெயர், முற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியனவாக் அமைந்து செயலாற்றும் (65—67). பகுதி மட்டுமே அமைவதனைத் தனிவினை என்றும் பகுதியுடன் ஏனைய பகுபத உறுப்புக்கள் தொடர்ந்து அமைவதனைத் தொடர்வினை என்றும் இலக்கணக் கொத்து உரைக்கின்றது. இவ்விருவகை வினைச் சொற்களுள் முன்னது பகாப்பதமாகவும் பின்னது பகுபதமாகக் கருதத்தக்கன.

தனிவினை

தொழிற்பெயர்	—	அறிகொன்று அறியான்
முற்று	—	எனக்கு உரை (ஏவல்), கொள் வாரும் கள்வரும் நேர் (நேர்வர்) (வேறு வகை வினை)
பெயரெச்சம்	—	கொல்களிறு
வினையெச்சம்	—	பாலறி வந்த (அறிய வந்த)

தொடர்வினை

தொழிற்பெயர்	—	வருதல், செய்தி
முற்று	—	வந்தான், குழையன், வேறு
பெயரெச்சம்	—	வந்த சாத்தான்
வினையெச்சம்	—	வந்து போனான்

தொடர்வினைச் சொற்களுள் சில வடிவம் மாறாத நிலையில் வெவ்வேறு வகை வினைகளாகச் செயலாற்றுதலை இலக்கணக் கொத்து உரைக்கின்றது. அவற்றுட் சில வருமாறு:

1.	உடன்பாடாகவும் மறையாகவும் வருதல்	செய்யாய்
2.	பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் வருதல்	தேடிய பொருள், தேடிய வந்தான்
3.	பெயராகவும் வினைமுற்றாகவும் வருதல்	அந்தணனைக் கொன்றான் அரசன் கொன்றான்
4.	பெயரெச்சமாகவும் பெயராகவும் வருதல்	பிறந்த சாத்தான், பிறந்த இறந்தன்

5. வினையெச்சமாகவும் பெயராகவும் வருதல்	ஓதுவான் (ஓத) வந்தான் ஓதுவான் வந்தான்
6. வினை முற்றாகவும் பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் வருதல்	ஓரறிவு ஒன்றனையும் செய்யா, செய்யாச் சாத்தன், செய்யா வந்தான்

வந்தான் போன்ற அமைப்புச் சொற்கள் தெரிநிலை வினை என்றும் குழையன், அன்று போல்வன குறிப்பு வினை என்றும் வேறு, இல்லை, உண்மை, அல் போல்வன தெரியாநிலை வினை என்றும் இந்நூலில் கூறப்படுகின்றன. இங்குக் கூறப்படும் வேறு முதலியன 'தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூற்களில் விரவுத் திணைக் குறிப்பு வினையாகக் கருதப்படுகின்றன. இவ்வகைச் சொற்கள் திணை, பால், எண், இடம் மட்டுமன்றி, தொழின்மையும் தெளிவாகப் புலப்படுத்தல் இன்றி அமைந்திருத்தல் பற்றி, இவற்றைத் தெரியாநிலை வினைகள் என்று தேசிகர் சுட்டுகின்றார் போலும்.

பிறவினை

பிறவினைச் சொற்கள் வி, பி எனும் விகுதிகள் இணைந்து வந்தோ தனித்தனியே வந்தோ அமைகின்றன (71).

நடத்துவிப்பி, நடப்பி, நடத்துவித்தான், உண்பித்தான்

இவ்விகுதிகள் 'நட' 'உண்' போன்ற தனிவினைப் பகுதியோடு சேர்ந்து பிறவினையினையும் 'நடத்து' போன்ற பிறவினைப் பகுதியோடு சேர்ந்து இயக்குவினையினையும் அமைக்கின்றன.

மெல்வினை வல்வினை காரணமாக அமையும் தனிவினை, பிறவினை வேறுபாடும் இந்நூலில் (73) சுட்டப்படுகின்றது.[15]

தீர்தல்—தன்வினை தீர்த்தல்—பிறவினை

செயப்பாட்டு வினை

இவ்வினையினை இலக்கணக் கொத்து (78) செயப்பாட்டு வினை, படுசொல் என்றும் இதன் பொருளைப் படுபொருள் என்றும் சுட்டுகிறது. இவ்வினைச் சொல் வினைமுதல், செயப்படுபொருள், தொழிற்பெயர் ஆகியவற்றிற்குப் பயனிலையாக வரும். படு உருபன் செயப்படு பொருளை உணர்த்தும். எனினும், இவ்வினை படு இன்றியும் அமையும்.

வினைமுதற்குப் பயனிலை — அரன் அருச்சிக்கப்பட்டான்
செயப்படுபொருட்குப் பயனிலை — ஆடை தரப்பட்டது
தொழிற்பெயருக்குப் பயனிலை — ஒழுக்கம் செய்யப்படும்
படுஇன்றிச் செயப்பாட்டுவினை — இல்வாழ்வான் என்பான்

இல்வாழ்வான் என்பான் என்பதில் எனப்படுவான் என்ற அமைப்பில் அகநிலையில் உளது. இத்தகு அமைப்பு பழந் தமிழில் வழங்கியது. தொல்காப்பியம் செயப்பாட்டு வினையை விவரிக்கவில்லை. எனினும் அது எழுதப்பட்ட காலத்தில் படு உருபன் பெற்ற செயப்பாட்டு வினை வழக்கில் இருந்தமையை 'எழுத்தெனப்படுப' (1:1:1) எனும் நூற்பாத் தொடர் வெளிப் படுத்துகின்றது.

வினை முற்றுப் பெயர்

வினை முற்றுப் பெயர் வினை முதல், செயப்படுபொருள், கருவி, இடம், தொழிற்பெயர் ஆகியனவாகச் செயலாற்றும். இவ்வகைப் பெயர் எழுவாய் முதலிய எட்டு உருபுகளையும் ஏற் கும். ஈற்றயல் திரிந்தும் இகர விகுதி பெற்றும் இப்பெயர் அமை வதுண்டு.

வினைமுற்றுப் பெயர்	— கொண்டானது மாடு
ஈற்றயல் திரிந்த வினை முற்றுப் பெயர்	— தின்பவர் (< தின்பார்)
இகரவிகுதி பெற்ற வினை முற்றுப் பெயர்	— பிறை சூடி, ஊருணி

வினை முற்றுப் பெயராகச் செயலாற்றுதலை இந்நூலாசிரி யர் வினை முற்றுப் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். தின்பார் போன்ற வினை முற்றுச் சொற்களே தின்பவர் என்று திரிகின் றன என்பது இவர் கருத்து. தின்பார் அமைப்புடைய சொற்கள் வேற்றுமை ஏற்றுப் பெயராகச் செயலாற்றும் போது மட்டுமே பெயர் எனும் கருத்துப்பட வருகின்றன. ஆனால் தின்பவர் போன்ற சொற்களில் அமைப்பளவிலேயே பெயர்த்தன்மை விளங்குகின்றது. தின்பார் என்பது தின்+ப்+ஆர் (வினைப் பகுதி+காலவுருபன்+பால்உருபன்) என்றும் தின்பவர் என்பது தின்+ப்+அவர் (வினைப்பகுதி + காலவுருபன் + சுட்டுப்பெயர்) என்றும் அமைந்துள்ளன. இரண்டும் வெவ்வேறு அமைப்புடை யனவாகும்.

வினையாலணையும் பெயரைத் தொல்காப்பியம், நன்னூல் போல்வன பயன்பாட்டின் (Function) இன்றியமையாமை கருதிப் பெயரியலில் விளக்குகின்றன. ஆனால் இந்நூல் அமைப்பிற்கு முன்னுரிமை தந்து வினையியலில் விளக்குகின்றது. தொழிற் பெயரும் இவ்வாறே விளக்கப்படுகின்றது.

வினையெச்சம்

இலக்கணக் கொத்து (84) வினையெச்சம் குறித்த அறிஞர் களின் பல்வேறு கொள்கைகளைத் தொகுத்துத் தருகின்றது. அவை வருமாறு:—

1. எச்சம் என்பது அடைமொழியே — அட்டசோறு (பெயரடை) உறங்கி விழித்தான் (வினையடை)
2. முற்றின் விகாரமே எச்சம் — உண்ட சாத்தன், உழுது வந்தான்
3. பெயரெச்சமும், வினையெச்சமும் குறைவினையாதலால் எச்சம் ஒன்றே.
4. குறைவினை என்னும் முடிக்கும் சொல் பெயர், வினை என இருவகைப்படுதலால் எச்சம் இருவகைப்படும்.
5. தன்வினை, பிறவினைத் திறத்தால் எச்சம் இரு வகைப்படும். வந்த பணம், வருவித்த பணம்
6 காலம் மூன்றாகையால் எச்சமும் மூன்று வகைப்படும்.
7. தலைமை எச்சம், இல்தலைமை எச்சம் என இரு வகைப் படும் — தச்சன் செய்த தேர், அரசன் செய்த தேர்
8. காரண எச்சம், காரிய எச்சம் என இருவகைப்படும். மழை பெய்த நீர் உண்ட சோறு
9. முதல் வினை எச்சம், சினை வினை எச்சம் என இருவகைப் படும். விழுந்த பையன், விழுந்த பல்
10. இயல்பு எச்சம், திரிபு எச்சம் என இருவகைப்படும். மருவிய நாள், மரீஇய நாள்
11. விரி எச்சம், தொகை என இருவகைப்படும். பொருததகர், பொருதகர்
12. விகுதியால் அமைவன, சொல்லால் அமைவன என்று இரு வகைப்படும் — செய்து, செய்பு; செய்பாக்கு, செய்தபின்

இவை யாவும் அமைப்பு, பொருள் எனும் வெவ்வேறு அடிப்படையிலான கோட்பாடுகளாகும். இரண்டாவது கொள்கை இக்கால மொழியியலாருக்கு முன்னோடியாகக் காணப்படுகின்றது. எச்சங்கள் யாவும் அகநிலையில் முற்றுக்களே என்பது மொழியியலார் கருத்தாகும்.

'மரீஇய' எனும் அமைப்பிலுள்ளவையே பழைய சொற்களாகும். இவை நாளடைவில் உடம்படுமெய்(வ்) பெற்று மருவிய, மருவின என்று ஆயின. ஆனால் இலக்கணக் கொத்து இவற்றைப் பிறழ்ந்து கூறுகின்றது, பெயரெச்சத் தொகையே வினைத்தொகை (பொருதகர்) என்பது இந்நூற் கருத்து.

வினையியலின் ஈற்றில் இருதிணை, ஐம்பால், மூவிடத்திலும் பொதுவாக வழங்கக் கூடிய வேறு, இல்லை, உண்டு, யார், வேண்டும், தகும், படும், வினையெச்சம், பெயரெச்சம், வியங்கோள் எனும் பத்தும் இந்நூலில் (85) சுட்டப்படுகின்றன. இவற்றுள் வேண்டும், தகும், படும் என்பன துணை வினைகளாகும்.

வினைச் சொற்கள் பலவாக வகைப்படுத்தி விளக்கப்பட்ட போதிலும், அவை யாவும் முதனிலை, தொழிற்பெயர், வினையெச்சம், பெயரெச்சம்,முற்று எனும் ஐந்தனுள் அடங்கும் என்பது இந்நூற் (69) கருத்தாகும்.

ஒழிபியல்

வேற்றுமையியலிலும், வினையியலிலும் கூறப்படாமல் ஒழிந்த செய்திகளும், பிற செய்திகளுமாகச் சில இவ்வியலில் தொகுத்துக் கூறப்படுகின்றன. வட சொற்களைத் தமிழில் எழுதும் முறை, எழுத்திலக்கணச் செய்தி, புணர்ச்சி, பகுபதம், சில தொடரமைப்பும் போன்ற செய்திகள் இவ்வியலில் கூறப்படுகின்றன.

அளபெடை

இலக்கணக்கொத்து (90) இயற்கை அளபெடை, செயற்கை அளபெடை, எழுத்துப்பேறு அளபெடை, இசைநூல் அளபெடை, ஒற்றுப்பேறு அளபெடை என அளபெடையை ஐவகைப்படுத்துவர் என்றும் குறில், நெடில், மெய் ஆகியன அளபெடுக்கும் என்றும் குறிப்பிடுகின்றது. குறில் முதலியன அளபெடுத்தல் முறையே

குற்றெழுத்தளபெடை, நெட்டெழுத்தளபெடை, ஒற்றெழுத்தளபெடை என்று சுட்டப்படுகின்றன.

விளி, பண்டமாற்று, புலம்பல், முறையீடு முதலியவற்றில் அளபெடுப்பது இயற்கையளபெடை என்றும் செய்யுளில் யாப்பு அமைதிக்காக அளபெடுப்பது செயற்கையளபெடை என்றும் குறிக்கப்படுகின்றன. எழுத்துப்பேறு அளபெடை புணர்ச்சியில் அமைவதாகும். ஒற்றுப்பேறு அளபெடை அல்லது ஒற்றெழுத்தளபெடையினைப் பிறநூற்கள் ஒற்றளபெடை என்று சுட்டுகின்றன.

இணையெழுத்து

ஐ, ஔ ஆகிய ஈரெழுத்துக்களையும் அய், அவ் அல்லது அஇ, அஉ என்றும் எழுதுவர் என்றும் இவை போலி எழுத்துக்களாதலால் இவற்றைக் கையாளுதல் கூடாது என்றும் சில இலக்கணிகள் கூறுவதைச் சுவாமிநாத தேசிகர் (91) எதிர்க்கின்றார். இவ்வெழுத்துக்கள் செய்யுட்களில் மோனை, எதுகை இயைபுடன் வரக்கூடியவை. வட நூலாரின் சமாணக்கரம் என்பதை இணையெழுத்து என்று மொழி பெயர்க்காமல் பிழையாகப் போலி என்று பெயர்த்துள்ளனர். இவற்றை மொழியில் போற்றுதல் வேண்டும் என்பது தேசிகரின் கருத்து.

போலி யெழுத்தைப் போற்றுதல் கடனே

புணர்ச்சி

இலக்கணக் கொத்து (111-118) ஒலிமாற்றத்தினைப் புணர்ச்சி விகாரம், புணர்ச்சியில் விகாரம் என்று பகுத்துக் கூறுகின்றது. இவை முறையே தொடரிலும் சொல்லிலும் அமைவனவாகும்.

புணர்ச்சி விகாரத்தை எழுத்திலக்கண விகாரம், யாப்பிலக்கண விகாரம் எனப் பகுத்துரைக்கும் இந்நூல், இச்செய்திகள் பிற இலக்கண நூற்களில் விரிவாக உள்ளமையால் இங்கு விரித்துரைக்கப்படவில்லை என்கிறது.

புணர்ச்சியில் விகாரம் தோன்றல், திரிதல், கெடுதல், நிலைமாறுதல் என நால்வகைப்படும்.[16]

தோன்றல் — யாவது (<யாது), சென்றீ (<செல்)
திரிதல் — மாசி (<மாகி), உயர்திணைமேன
(<உயர்திணை மேல)

கெடுதல் — ஆனை (<யானை). ஆடு (<யாடு)
நிலைமாறுதல் — சதை (<தசை), வைகாசி (<வைசாகி)

யாவது என்பதே யாது என்று வகரம் கெட்டு அமைந்திருக்க, தொல்காப்பியம் முதலிய நூற்கள் யாது>யாவது என்றானது எனப் பிறழக் கூறுகின்றன. இந்நூலும் முந்தை நூற்களை வழிமொழிகின்றது. செல் என்பதே சென்றீ என ஆயிற்று என்பது இந்நூற் கருத்து. ஆனால் சென்று+ஈ>சென்றீ என்பதே உண்மையாகும். செய்து வாய்பாட்டு எச்சத்துடன் துணை வினை 'ஈ' சேர்ந்து ஏவல்வினையினை அமைக்கின்றது. இத்தகைய அமைப்புத் தமிழில் பயின்று வரும் ஓர் இயல்பே. படித்துப் பார், படித்துக் காட்டு என்பன இத்தகையனவே.

ஒலியிடம் பெயர்தல் இங்கு நிலை மாறுதல் எனச் சுட்டப்படுகின்றது. ஒலிப்புக் காரணமாகச் சொற்களில் அமையும் ஒலி மாற்றமே இங்குப் புணர்ச்சியில் விகாரம் (நிலைமொழி+வருமொழி எனும் புணர்ச்சி இல்லாத) என்று குறிக்கப்படுகின்றது.

பகுபதம்

பகுபதம் குறித்த செய்திகளைக் கூறுமிடத்து இந்நூல் (117) தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூற்களில் சொல்லப்படா விகுதிகள் சிலவற்றைச் சுட்டுகின்றது.

ம் (அகத்தியம்), பு (புணர்ப்பு), சி(புணர்ச்சி), வி(குழவி), வு(மகவு), மன் (வடமன், தென்மன்), தல் (எழுதுதல்), காடு (வேக்காடு), பாடு (உணப்பாடு), அம்(ஆக்கம்), உள்(செய்யுள்) எனும் விகுதிகள் இலக்கணக்கொத்தில் சுட்டப்படுகின்றன, இவற்றுள் பல தொல்காப்பியம், நன்னூல் நூற்பா மொழியில் காணப்படுகின்றன. எனினும் தேசிகர் கூறியவாறு சிறுபான்மை வழக்குப் பற்றி இவற்றை முந்தை நூற்கள் விகுதிப் பட்டியலில் சேர்க்கவில்லை.

தொகையும், தொகாநிலையும்

அறுவகைத் தொகை, தொகாநிலை ஆகியன குறித்த வெவ்வேறு இலக்கணிகளின் கருத்துக்களை இலக்கணக் கொத்து (96) தொகுத்துக் கூறுகின்றது.

தொகை

1. வேற்றுமை உருபு முதலிய சொற்கள் தொகுவது

2. நிலைமொழியும் வருமொழியும் நீங்காது ஈறும் முதலும் இயைந்து நின்று விட்டிசையாது ஒரு சொல் போல வருவது
3. பல சொற்கள் சேர்ந்து விட்டிசையாது ஈற்றெழுத்தும் முதலெழுத்தும் அறியப்படாவண்ணம் வருவது.

தொகாநிலை

1. வேற்றுமை உருபு முதலிய சொற்கள் வெளிப்படையாக வருவது.
2. நிலைமொழியும் வருமொழியும் விட்டிசைத்து வருவது.
3. நிலைமொழியும் வருமொழியும் விட்டிசைத்து ஈறும் முதலும் அறியப்படும் வண்ணம் வருவது.

தொகுப்புரை

இலக்கணக் கொத்து முந்தைய பல இலக்கண அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்துக் குறிப்பிட்ட ஓர் இலக்கணச் செய்தியை விவரிக்கிறது. இதன் வழித் தன் பெயருக்கு ஏற்ப ஒரு கருத்துத் தொகுப்பு நூலாக இந்நூல் திகழ்கின்றது.

சொல் இலக்கணத்தில் வேற்றுமையும் சிலவகை வினைச் சொற்களும் இங்கு விரிவாகக் கூறப்படுகின்றன.

தமிழ் இலக்கணத்தோடு வடமொழி இலக்கணத்தை விரவி இரு மொழிகட்கும் இலக்கணம் ஒன்றே எனும் கருத்தை நிறுவும் முயற்சியில் எழுந்த நூலிது. ஏற்கனவே வடமொழி இலக்கணத்தைத் தமிழ் இலக்கணத்தோடு ஒப்பிட்டும் விரவியும் இயற்றப்பட்ட பிரயோக விவேகம் பெயரளவில் மட்டுமன்றிச் செய்தி அளவிலும் வடசொற்களைப் பயன்படுத்தி இருக்கின்றது. இக்குறையினைப் போக்கும் முயற்சியும் இந்நூல் எழுதுவதற்குரிய காரணங்களுள் ஒன்றெனலாம்.

குறிப்புக்கள்

1. உதாரணச் சூத்திரம் ஒன்று மட்டுமே உள்ளது. அதுவும் பிரயோக விவேகத் தழுவலாகக் காணப்படுகிறது.

நாரா யணன்பூ வோரா யிரத்தைக்
கரத்தாற் கொய்தோ ரரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளிக் கொண் டான்... (இ.கொ. 15)

இந்திரன் தாமரையைக் கரத்தால்
கொய்திறை வனுக்குத்
தந்திருங் குற்றத்தி னீங்கி
விண்மே லிருந்தான்... (பி.வி.10)

உதாரணச் சூத்திரத்தில் தேசிகர் சைவப்பற்றை வெளிப் படுத்தியுள்ளார். இப்போக்கு நூல் முழுதும் உதாரணம் கூறு மிடத்து ஆங்காங்குக் காணப்படுகிறது.

2. பிரயோக விவேகத்தில் உள்ள வடசொல்லின் ஆட்சியும் இலக்கணக் கொத்து எழுந்திட ஒரு காரணம் எனலாம். பிரயோக விவேக வடசொற்களை இந்நூல் தமிழ்ப்படுத்தியதிலிருந்து இதனைத் தெளியலாம்.

3. .... சொல்லினுட் சிலவிதியிடக்கி
யேனைநால் விதியு மியம்பில மென்க (பாயிரம் 7)

4. அவரவர் பெயர்களை அங்ஙனமங்ஙன முரைக்கிற் பெருகு தல் பற்றிக் கூறலாம் (உரை 7)

5. இச்சூத்திரம் பிறர் மதங்கூறலே, தன்றுணிபுரைத்தலன்று. பிறர் தம்முன் மறுப்பர். அவை விரிக்கிற் பெருகும் (உரை 66)

6. நன்னூல் 303, இலக்கண விளக்கம் 205

7. 'நும்மின் திரிபெயர்' (தொல்காப்பியம் 2:4:26)

8. சேனாவரையர் (தொல். சொல். 71)

9. இவற்றுள் 1,2,5 என்பனவும் தெரிநிலை, தெரியாநிலை எனும் பகுப்பும் கல்லாடர் உரையில் (தொல். சொல். 73) காணப் படுகின்றன. செயப்படுபொருள் குறித்த செய்திகள் பிரயோக விவேகத்தை (12) வழிமொழிதலாக அமைந்துள்ளன

10 கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், விருப்பாய் ஏற்றல் ஈவோன் ஏற்றல் நான்கும் பிரயோக வேகத்தில் (13) இடம் பெற்றவையாகும்.

11. நிலைத்திணை, இயங்குதிணை என்பது பிரயோக விவேகப் (11) பகுப்பு.

12. பலவின் ஈட்டமும் இருவகை நூற்களும் பிரயோக விவே கத்தில் (17) இல்லை.

13. பிரயோக விவேகம் (13)

14. இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயரைத் தொல்காப்பியம் வினைசெய் இடம் என்றும் பிரயோக விவேகம் சதிசத்தமி என்றும் சுட்டுகின்றன.

15 தன்வினைக்கும் பிறவினைக்கும் உரியதாய வினைவடிவங்களைப் பொதுவினை என்று இந்நூல் சுட்டுகின்றது. நடந்தான், நடத்தினான் இரண்டுக்கும் 'நடத்தல்' பொதுவினை.

16. பொருத்தப் புணர்ச்சி, பொருத்தமில் புணர்ச்சி, ஒருங்கியல் புணர்ச்சி எனும் பகுப்பும் இந்நூலில் (106—109) காணப்படுகின்றது. தொல்காப்பியம் முதலிய நூற்களில் விவரிக்கப்பட்டுள்ள புணர்ச்சிக் கருத்துக்கள் முதல் வகையில் அடங்கும். ஆற்றொழுக்கும் அடிமறிமாற்றும் தவிர்ந்த பொருள்கோள்கள், மருஉமொழி, பொய்யுரை, இடைப்பிறவரல், பண்பு, அதிகாரம் ஆகிய பதத்தோடு பதம் சேருவதும் பதத்தோடு விகுதியோ உருபோ உம்மையோ சேருவதும் இரண்டாம் வகையைச் சாரும். ஒருகால் பொருந்தியும் ஒருகால் பொருந்தாதும் அமைவது ஒருங்கியல் புணர்ச்சி எனப்படுகிறது.

துணை நூற்கள்

இலக்கணக் கொத்து, ஆறுமுக நாவலர் பதிப்பு.

பிரயோக விவேகம், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு

தொல்காப்பியம் (உரைகளுடன்) கழக வெளியீடு

தொல்காப்பியம் (மூலம்) நியுசெஞ்சுரி நூல்நிலைய வெளியீடு

நன்னூல், கழக வெளியீடு

இலக்கண விளக்கம், கழக வெளியீடு

வீரசோழியம், கழக வெளியீடு

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு 10-00
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. கோவை, கலம்பக நூல்கள் 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக்கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. உலா நூல்கள் 10-00
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. பாமாலை நூல்கள் 12-00
    1. திருப்பணிமாலை
    2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (,, ,,)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள்

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 15-00 செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்களைச் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன்பணம் அனுப்பவேண்டும், பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும் நூலகத்திற்கும் 5 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1.

திருப்பதி பிரிண்டர்ஸ் ★ மதுரை-1.